Regd No M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 ஈரோடு 25-9-1948 சனிக்கிழமை மலர் 3.

# பெருமாள் மாடு!

புரும்—புரும்—டும்......புரும்புரும்டும்......புரும்...
இந்தியைத் தமிழ் நாட்டிலே கட்டாய மாக்குறியா?
புரும் புரும் டும்......புரும் புரும் டும்......புரும் புரும் டும்...
எதிர்த்தாலும் இனத்தவர் பழித்தாலும்
இஷ்ட பாடமெண்ணு இளிச்சிச் சொல்லறியா
புரும் புரும் டும்......
மனசை விட்டு—அறிவை விட்டு
இந்த நாட்டிலே இந்தியாலத்தான்
எல்லாரும் சுகத்தை அடையலாமெண்ணு
சொல்லறியா சொல்லறியா எங்கும் சொல்லறியா
புரும் புரும் டும்......
ஆணானாலும் பெண்ணானாலும்
இந்தி வேணா மெண்ணு சொன்னா
போலீசை விட்டுப் புடிக்கணும் அடிக்கணும்
புரும் புரும் டும்......
கிழவனானாலும் கொமரனானாலும்
அறிஞனானாலும் குழந்தையானாலும்
விலங்கிட்டுப் போடணும் வேணாமெண்ணா
புரும் புரும் டும்......
தமிழ் கெடும் எங்கள் தமிழ்கெடு மெண்ணு
உன் இனத்தவங்க ஊர் ஊராய்ச் சொன்னா
சட்டம் போடணும் தடியடி செய்யணும்
புரும் புரும் டும்......
இல்லா விட்டா பதவியை விட்டு
இழிச்சி விடுவேன் இழிச்சி விடுவேன்
நல்லதோ கெட்டதோ நான் சொல்லறதே
எல்லாம் செய்யணும் எல்லாம் செய்யணும்
புரும் புரும் டும்......
இந்தப் பெருமா மாடுக ளெல்லாம்
இனத்தையும் பாரா இழிவையும் பாரா;
பதவிக் காகத் தன்மானம் விற்று
செய்யும் எதையும்; எண்ணிச் செய்யாதே;
ஆனால் பெருமா மாடோ
தலையை ஆட்டும் தப்பு செய்யாதே!

புலவர், வாணிதாசன்.

சிறுவர் பகுதி.

# சொல்லும் செயலும்?

"தாதா"

ஒரு ஊரிலே சந்தேகம் என்ற பெயருடைய ஒரு அறிவாளி இருந்தான். அவன் தன் பெயருக்குத் தகுந்தபடி எதைக் கண்டாலும், கேட்டாலும் சந்தேகப்பட்டு ஆராய்ந்து உண்மையை உணரும் குணம் உடையவனாக இருந்தான்.

சந்தேகத்திற்கு ஒரு தோழன் இருந்தான். அவன் பெயர் நம்பிக்கை. நம்பிக்கையோ சந்தேகத்திற்கு நேர்மாற்றமான குணம் உடையவன்; எதைக் கண்டாலும், கேட்டாலும் அப்படியே நம்பிவிடுவான். பிறகு, நம்பிநம்பித்தானே நாசமாய்ப்போனேன் என்று சந்தேகத்திடம் வந்து சொல்லி அழுவான்.

தன் தோழன் நம்பிக்கையின் மீது சந்தேகத்திற்கு அதிக அநுதாபம் இருந்தது. எப்படியாவது நம்பிக்கைக்குச் சரியான புத்தி கற்பிக்கவேண்டும் என்று சந்தேகம் தீர்மானித்துக் கொண்டிருந்தான்.

நம்பிக்கைக்கு வேதம் என்ற ஒரு மனைவியும், பிற்போக்கு என்ற ஒரு மகனும் இருந்தனர். பிற்போக்கு பிறந்ததிலிருந்தே சதா நோயுண்டு மெலிந்துகொண்டே வந்தான். வேதத்தின் மீது நம்பிக்கைக்கு விருப்பம் இருந்தாலும், அவளை அவன் சரியாகக் கவனிப்பதுகூட இல்லை; ஏனென்றால், அவள் வயிற்றில் பிறந்த பிள்ளையாகிய பிற்போக்குவின்கவலை, நம்பிக்கையை நாளுக்குநாள் வாட்டி வதைத்துக் கொண்டே இருந்தது.

சந்தேகத்திற்கு விஞ்ஞானம் என்ற ஒரு மனைவியும், முற்போக்கு என்ற ஒரு மகனும் இருந்தனர். முற்போக்கு பிறந்ததிலிருந்து நாள் ஒருமேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து, வானில் விளையாடி மகிழும் வல்லமை உடையவனாகவும் விளங்கினான்.

இப்படிச் சந்தேகத்தின் குடும்பம் சதா இன்பமயமாக இருப்பதைக்கண்டு நம்பிக்கைக்குக் கொஞ்சம் பொறாமை கூடப் பிறந்தது; ஆனால், அவர்கள் நட்புமட்டும் கெடவில்லை.

ஒரு நாள் வழக்கம்போல் நம்பிக்கை 'நம்பி நம்பித்தானே நாசமாய்ப் போனேன்' என்று அழுதுகொண்டே சந்தேகத்திடம் ஓடி வந்தான். சந்தேகத்திற்கு அந்தத் தடவை இரக்கத்தோடு சற்று கோவமும் உண்டாகிவிட்டது.

'உனக்கு அறிவிருக்கிறதா இல்லையா? ஒரு தடவை நம்பி மோசம் போனால், மறுதடவையும் நம்பலாமா?' என்று கேட்டான்.

அதற்கு நம்பிக்கை, அடச் சந்தேகமே! நான் சாதாரண மனிதனையா நம்பினேன்? கடவுளையே அல்லவா நம்பினேன்! கடவுளை நம்பினோர் கைவிடப்படாரே....?' என்று அழுதான்.

'அட மூடநம்பிக்கையே! கடவுளை நம்பி என்ன கேடு செய்துவிட்டாயோ!! விவரமாகத்தான் சொல்லி அழேன்!!!'. என்றான் சந்தேகம்.

அய்யோ! அந்தப் பாழாய்ப் போன கடவுளுக்குக் கண்ணில்லையா? உள்ளமும் கல்லா? ஏழை மீது இரக்கம் இல்லையா? அதை நம்பிக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்த மார்க்கண்டேயனைக் காப்பாற்றவில்லையா? என் மகனை மட்டும் எப்படிக் கைவிட்டுவிடலாம்? சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டே என் மகன் செத்துவிட்டானே!' என்று அலறி அழுதான் நம்பிக்கை.

'ஓ......! உன் மனைவி வேதத்தின் மகன் பிற்போக்கு இறந்துவிட்டானா? சரிசரி; அது நான் எதிர்பார்த்த செய்திதான்! உன் மகன் பிறந்த உடனேயே இறந்து போகாமல், இவ்வளவு காலம் உயிரோடு இருந்ததே பெரிய காரியம்!' என்று சொன்னான் சந்தேகம்.

'ஏம்பா அப்படிச் சொல்கிறாய்? என் மனைவி வேதம் கடவுளுக்கு மிகவும் வேண்டியவள்; பக்தகோடிகளின் விசுவாசத்தைப் பெற்றவள் அல்லவா?' என்றான் நம்பிக்கை.

'எத்தனையோ கடவுள்களும், எத்தனையோ விதவிதமான பக்தர்களும் உண்டென்கிறார்களே! உன் வேதத்துக்கு வேண்டிய கடவுள் யாரோ? உன் மகன் பிற்போக்கு எந்தக் கடவுளைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தானோ?' என்று விசாரித்தான் சந்தேகம்.

'எத்தனை கடவுள்கள் இருந்தாலும் எல்லாவற்றிற்கும் ஆதிமூலமான கடவுள் ஒன்றே ஒன்றுதானே!' என்றான் நம்பிக்கை.

'சொல்லிலா? செயலிலா?' என்று கேட்டான் சந்தேகம். அதற்குச் 'சொல் வேறு செயல் வேறா?' என்று கோவமாகக் கேட்டுவிட்டுச் சந்தேகத்தை முறைத்துப்பார்த்தான் நம்பிக்கை.

'அட மூட நம்பிக்கையே! உன் மூளைக்குச் சற்றுவேலை கொடுத்துப் பார்க்கக் கூடாதா? ஒரு மூலக் கடவுள், ஒரு மூல மதம், ஒரு மூலப்புராணம் என்றிருந்தால், உலகில் மக்களுக்குள் இத்தனை பேதங்களும், பித்தலாட்டங்களும் உண்டாகி இருக்கமுடியுமா? ஒரே ஒரு மூலக் கடவுளாவது இருக்கலாம் என்று நம்புவதற்குக்கூட என்ன ஆதாரம் இருக்கிறது?

மேலும், அந்தக்காலத்திலேயே அவ்வளவு பெரிய மகான் ஏசுநாதரையும், இந்தக் காலத்திலும் அற்புதமாக அந்தராத்மாவோடுபேசிக் கொண்டிருந்த மகாத்மாவையுங் கூட, கடவுள் கைவிட்டு விட்டாரென்றால், உன் மகன் மட்டும் அவருக்கென்ன பெரிதா?

ஏதோ மார்க்கண்டேயனை மட்டும் காப்பாற்றினாரே! என்று பிரலாபிக்கிறாயே! இப்போது அந்த மார்க்கண்டேயன் எந்த ஊரிலிருக்கிறான்? விலாசம் என்ன என்பதாவது உனக்குத் தெரியுமா? என்று கேட்டான் சந்தேகம்.

அதற்கு, 'ஆதிகாலத்தில் உள்ள மக்கள் தம் அறிவுக்குத் தகுந்த அளவில் மட்டும் கடவுளை அறிந்து சொன்னதினால், ஆயிரத்திநானூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய புராணங்களில்தான் ஏதாவது முரண்பாடுகள் இருந்தாலும் இருக்கலாம்! ஆனால், கடைசியாகத் தோன்றிய இஸ்லாம் மதத்தில்ஒரு முரண்பாடேனும் உண்டா?' என்று கர்ச்சினை புரிந்தான் நம்பிக்கை.

சந்தேகம் சிரித்துக்கொண்டே அளித்த பதில், 'ஏ மூட நம்பிக்கையே! முழுக்கவனமாகக் கேள்!! அல்லாஹுத்தாலா இல்லாத இடமே இல்லை என்று சொன்ன முஹம்மது நபியின் குர்-ஆனில், கடவுளைப் பற்றிச்சொல்லும்

# நம்பிக்கை நல்லறிவு விளக்கத்திற்கு நல்லதா?

★

காலையெழுந்த கதிரோன் மக்களையும், மற்ற புற்பூண்டுகளையும், செடிகளையும், கொடிகளையும் தன்னொளிப் பிழம்பால் உவகையுறச் செய்துவிட்டு மேற்றிசையில் சாய்ந்த நேரத்தில், என்னகத்தை விட்டு நான் வெளிக்கிளம்பினேன், கடலோரம் சென்று கண்கவர் வனப்பை-குறிப்பாகக் கருங்கடல் நீலவானை முத்தமிடும் காட்சியைக் கண்டு களிக்கலாம் என்று. வாயிலை விட்டகன்று தெருவழி செல்லும்போது, நேரில் கண்டேன் யுான் நெடுநாட்களாகக் காணவேண்டும் என்று இருந்த நண்பனை. நெடுநாட்களாகக் காணவேண்டும் என்று இருந்த நண்பனைத் திடீரென்று காண நேரிடும்போது உள்ளத்திலே எழுகின்ற உவகையையும் அளவிடற்கியலுமோ? அவ்வுவகை சிரிப்பாகத் தோற்றமளித்து இருவர் கைகளையும் குலுக்கச்செய்தது.

அவன், பிறைசூடிய பித்தனிடம் தன் சித்தத்தைப் பறிகொடுத்தவன். நீறிலாது அவன் நெற்றி காணப்படாது. 'நமச்சிவாயவாழ்க, நாதன்தன் தாள் வாழ்க, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க,' என்று தொடங்கும் மாணிக்கவாசகனின் வாசகத்திலே தான் அளவிலா வாஞ்சை அவனுக்கு. கல்லூரிப் படிப்பிலே, விஞ்ஞானத்திலே, இலக்கியத்திலே கூட அவ்வளவு பற்று அவனுக்கில்லை.

ஒரு கொள்கையில் ஒருவன் மிகவும் நம்பிக்கை வைத்துவிடுவானேயாகில், அந்நம்பிக்கையை நாள்தோறும் வளர்த்துக்கொண்டே வருவானேயாகில், அவனுக்குப் பகுத்தறிவிருந்தாலும், அதனைப் பயன்படுத்தும் பண்பிருந்தாலும், தன்னுடைய நம்பிக்கையைச் சிதறடிக்கக்கூடிய ஏதாவதொரு உண்மையோ, கொள்கையோ அவனுக்குணர்த்தப்படுமேல், அல்லது அவனே அறிய நேருமேல் தன்னுடைய நம்பிக்கையை அவன் மாற்றிக்கொள்வதில்லை, மாற்றிக்கொள்ளவும் முடிவதில்லை. மாறாக தனது நம்பிக்கைக்கு நேர்மாறான கருத்தையே தனது நம்பிக்கைக்கு உகந்த கருத்தாகவும் தோன்றுமாறு தத்துவார்த்தம் செய்துகொள்வான்.

எடுத்துக்காட்டாக, மும்மொழிப்புலவர்—மூதறிஞர், செந்தமிழ் நாட்டில் முதன்முதலில் தனித் தமிழ்நடையில் அரும்பெரும் நூல்களை அழகுற இயற்றிய அறிஞர் மறைமலையடிகளார்—சைவமதத்தினிடம் அசையாத நம்பிக்கை வைத்துவிட்டவர். எனவே கண்ணப்பன் கல்லுக்குக் கண்ணப்பியதைக் கபோதியின் செயல் என்றால் ஏற்றுக்கொள்ள மாட்டார். பெரும் பாறையுடன் இணைக்கப்பட்ட நாவுக்கரசு, நமச்சிவாய மந்திரத்தால் மிதந்தார் என்பது பெரியதோர் புரட்டு என்றெண்ண அவர் மனம் இசையாது. சீராளனைத் துண்டித்துச் சமைத்த சிறுத்தொண்டனைக் கொலைஞன் என்று நாம் அவரிடம் கூறினால் சீறித்தான் தீருவார். சம்பந்தனுடைய எடு நீரோட்டத்தை எதிர்த்துச்சென்றது என்ற கதை விஞ்ஞானத்திற்குப் புறம்பானது என்றாலும் கூட அவர் அதை ஓர் புண்ணிய கதையாகத்தான் எண்ணுவர். எண்ணாயிரம்சமணர் கழுவிலேறுவதைப்பார்த்துக் கொண்டிருந்த சம்பந்தன் 'அன்பே சிவமெனும்' கொள்கையனாக இருந்திருக்கக் கூடுமோ என்று நாம் அய்யுற்றால், 'அய்யப்பாடு எற்றுக்கு?' என்றுதான் நம்மை அவர் வினவுவார். 'ஏனெனில் நன்னெறியாம் சிவநெறியைப் பழித்தோர்க்கு இன்மைதான் பரிசென்பார்.

குருதியும், சதையும், எலும்பும், வயிறும், வாயுமுள்ள யானையே உடலமைப்புக் கெட்டு இயக்கமற்றுப் (உயிரற்றுப்) போயின் உணவருந்தல் முதலான செய்கைகளற்றுப் போகும் போது, கல் யானை கரும்பருந்தியது, உண்மையாயிருக்குமோ என்று கேட்டால் 'அதுதான் அய்யனின் அருட்டிறம்' என்றுரைப்பார். ஆண்குறியும் பெண்குறியும் சேர்ந்த புணர்ச்சிக் குறிதான் இலிங்கம் என்பதை—இலிங்க புராண விளக்கத்தை—இலிங்கத்தைப் பார்க்கும் எவரும் ஒத்துக்கொள்வர். ஆனால் மறைமலையடிகளார் இலிங்க வழிபாட்டிலே நம்பிக்கை வைத்து விட்டதனால் தன் சிந்தனையைச் செலவழித்து இலிங்கத்திற்குக் கீழ்க்கண்ட விளக்கத்தைத்தருகிறார்:—

'இலிங்கத்தின் அடிப்பாகம்தான் செந்தீ வளர்க்கும் குண்டம். மேற்பாகம் எரிகின்ற நெருப்பினுடைய உருவம், அதாவது குவிந்த உருவம். அவர் சைவசமயத்திலே நம்பிக்கை வைத்து விட்டதனால் முற்பிறப்பு, பிற்பிறப்புகளிலும் நம்பிக்கை வைத்துள்ளார். எனவேதான் அவர் வறியருக்கு வழங்குதல் வேண்டும் என்று கூறுவாரேயொழிய, வறியரேயில்லாமற் செய்வதைப்பற்றிக் கூறமாட்டார். அப்படிக் கூறினால், நல்வினை, தீவினை, அவற்றின் காரணமாக உதிக்கின்ற பிறப்பு இறப்புகள் முதலியவற்றிலே அவர் வைத்துள்ள நம்பிக்கை தளர்ந்து விடுமல்லவா?

சைவ புராணங்கள் நவிலும் நாசகாரியங்களை நல்லவை யென்றும், கட்டுக்கதைக்கருத்து பொதிந்தவை என்றும், மதிக்கொவ்வா நிகழ்ச்சிகளை மாண்புமிக்கவை என்றும் போற்றிடும் அவர், வைணவ புராணங்களை இழித்தும் பழித்தும் கூறுவதிலே தயங்கமாட்டார். ஏன்? வைணவ புராணங்களை நடுநிலை பிறழாது, வாதத்திறங் கொண்டு தாக்குகிறார். ஆனால் அதே நடு நிலை பிறழாத தாக்குதலைச் சைவ புராணங்கள் மீது வீசிட விரும்புகிறாரில்லை. ஏனெனில் சிவனிடமும், அவனைப் பற்றி புகலும் புராணங்களிடமும், தாம் வைத்துள்ள நம்பிக்கையை தளர்த்தவோ, சிதறடிக்கவோ அவர் மனம் இசைய வில்லை. இவற்றைப்பற்றியெல்லாம் ஏன் கூறுகின்றேன் என்றால், மறைமலையடிகளாரைத்தாக்குதற்காகவல்ல. அறிவுக் கடலாம் மறைமலையடிகளாரைச் சிற்றறிவுடைய யான் தாக்குவேனாகில், அது கடலினை நோக்கி ஒரு சிறு குட்டை, 'உன்னினும் யானே அகன்று பரந்துளேன்' என்று கூறுவதற்கும், புலியையொரு நாய்க்குட்டி தாக்குவதற்கும், கதிரவனைக் கடைவிளக்குப் பழிப்பதற்கும்தான் ஒப்பாகும். பின்எதற்காக வென்றால், மறைமலையடிகளார் சைவத்தைப்பற்றியொரு சிறிதும் கவலை கொள்ளாது, சிவனைப்பற்றிச் சிந்தியாதிருந்திருந்தால், பெரிய புராணமும் இராமாயணம் போன்றே கட்டுக்கதைகள் நிரம்பிய ஓர் நூல், அது இராமாயணம் போன்றே திராவிடரை

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

---

போது "கடவுள் ஒவ்வொருவருடைய பிரடி நரம்பைவிடச் சமீபத்திலிருக்கிறார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால், முஹம்மது நபியோ, ஒரு நாள் இரவு கடவுளைக் கண்டு பேசுவதற்காக மக்காவை விட்டு (மிஃராஜ்) வான லோகத்திற்குப் போய்விட்டு வந்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது! எப்படி இருக்கிறது சொல்லும், செயலும்? என்று கேட்டான்.

அதைக் கேட்கவும் நம்பிக்கைக்குத் தாக்கி வாரிப்போட்டது போலிருந்தது. பதில் பேச நாவெழவில்லை; ஆனால், பகுத்தறிவு உணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக உதயமாவதைக் கண்ட சந்தேகம், மகிழ்ச்சியோடு நம்பிக்கைக்குவிடை கொடுத்து அனுப்பிவைத்தான்.

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# விவேகமறிந்த வீரனின் மனைவி.

போட்டி

எண் 2.

4 ஆண்டு நிரம்பாத அங்கயற்கண்ணி:— எம்மா? ஒனக்கு இப்போதான் கண்ணாலமா? அப்ப, எல்லார்க்கும் அப்படித்தானா?

இந்திராணி:— ஆமாம்டாகண்ணே? எல்லார்க்கும் இப்படி இல்லை? எனக்கும் ஒங்கப்பாவுக்கும் தான்? இது திராவிடத்தந்தை, பெரியாரவர்கள், ஆரியமூடு மந்திரத்தால் எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்லும் நம் நாட்டில் ஆரியம், வேதம் போச்சு, ஆச்சாரம் போச்சு, அனுஷ்டானம்போச்சு, சாஸ்திரம்போச்சு, சடங்குகள்போச்சு, மேல்ஜாதி, கீழ்ஜாதி எல்லாம்போச்சு, காலம்கலிகாலமாய்போச்சு, உலகமே வரவரக்கெட்டுப்போச்சு, என்று அங்கலாய்க்க, இவர்கள் பிடியில் சிக்கிச் சீரழிந்த, நம்திராவிட இன மக்களுக்கு, தைரியமாக, வாழ வழிவகை செய்ததுதான் இது.

அங்கயற்கண்ணி:— அப்படின்னா?

இந்திராணி:— அதான்! கண்ணாலம்.

* *

அங்கு வாழ்க்கை யொப்பந்தத்தில் பங்குகொண்டோர் அனைவரும் கொல்! என்று சிரித்தார்கள். அங்கயற்கண்ணி, வாயில் கற்கண்டுடன், "ஓ" அதுவா! சரிசரி! என்று வெளியில் ஓட்டம் பிடித்தாள் விளையாட.

* *

கல்வியில் தேர்வும், பேரழகியுமான இந்திராணியின் காதலன் ஏகாம்பரமும், அவன் நண்பன்—கட்டழகனும், பகுத்தறிவுவாதியுமான மாசிலாமணியும், சென்ற உலகப் போர்ப்படையில் சேர்ந்தனர் ஒரே நாளில். ஏகாம்பரம் பெங்களூர் சென்று, பயிற்சி பெற்று, இந்தியாவின் பல இடங்களில் சேவைசெய்து, மத்திய கிழக்கரங்கத்திற்கு மாற்றப்பட்டான். மாசிலாமணி ஜப்பல்பூர் சென்று பயின்று, மலேயா சென்றான். ஏகாம்பரம் சேனையில், தீரவீரச் செயல்கள் பல புரிந்து, மாற்றாரைத் திகைக்க வைத்தான். எங்கு நோக்கினும் ஏகாம்பரத்தைப் பற்றியே பேச்சு. எவர் மனதிலும் அவனது வீர உருவமே பிரதிபலித்தது. ராணுவத்தின் விருதுகள் பல வீரனை நாடி வந்தன. முடிவில் சேனையின் தலைமையதிகாரியாக உயர்த்தப்பட்டான். ராணுவத்தில், தனக்குக் கிடைத்த புகழை அடிக்கடி காதலிக்கு தெரிவித்து வந்தான். மாசிலாமணி சேவை செய்த படை, ஜப்பானியர்துடன் புறமுதுகு காட்டிப் பின்னோக்கி ஓடிவந்தது. மணிப்பூர் வந்ததும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் பிறந்தது. மனச்சோர்வுற்றிருக்கும் மாசிலாமணிக்குத் தலையில் இடி விழுந்தாற்போல் செய்தி வந்தது மனைவி இறந்தாள் என்று. அவனது ஒரே பச்சிளங்குழந்தை அங்கயற்கண்ணியை, நண்பன் மனைவி இந்திராணி வளர்த்து வந்தாள். தாய் முகங் காணாத சேய், அவளை அன்னையாகவே நினைத்திருந்தது. மனைவி இறந்தாலும், மகளுக்கு ஆதரவு ஏற்பட்டதைப்பற்றி மகிழ்ச்சிதான் மாசிலாமணிக்கு. ஏகாம்பரம் மணிப்பூர் அரங்கத்திற்கு ராணுவத்தலைமையதிகாரியாக மாற்றப்பட்டான். நண்பனைச் சந்தித்து சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டான். ஏகாம்பரத்தின் யுத்த தந்திரம் ஜப்பானியரைத் திணறவைத்தது. போதாக்குறைக்கு "முன்னைய" மாத மும்மாரி வேறு இடைவிடாது பெய்து இன்னலைத் தந்தது. உணவுப் பொருள்கள் நிரம்பி, ஜீரணிக்க முடியாமலிருக்கும் ஜப்பானியரின் குடல்கள் ஒட்டவாரம்பித்தன. பின் கேட்கவா வேண்டும்? வெற்றி கண்டு வந்த வழியே உயிர் தப்பித்தால் போதும் என்றோடியதை. மாசிலாமணிக்கு உத்தியோக உயர்வும் ஏற்பட்டது. வெற்றிராணி வேகமாகப் பவனி வரும்போது எதிர்பாராத விதமாக, மாற்றானின் மரணப்படையைச் சேர்ந்தவனொருவன் இந்திய உடையில் தீரத்துடன் உள் புகுந்து வெடிகுண்டொன்றை வீசினான். குண்டு வெடிக்கவே, தற்செயலாக, வெற்றி தேடித் தந்த வீரன் ஏகாம்பரத்தின் கண்கள் குருடாயின. செய்தி சென்றது இந்திராணிக்கு வானொலி மூலம், கண்கள் குருடாயின, இருந்தாலும் வைத்திய வல்லுனர்கள் பெரிதும் முயல்கிறார்கள், கண் திறக்கும் விரைவில் என்று.

கண்வைத்திய நிபுணர்கள், பல பரிசோதனையில் ஈடுபட்டு, பலன் காணாது நம்பிக்கையிழந்து, தற்போதைய விஞ்ஞானம் இன்னும் விரிவடைய வேண்டும். அப்போதுதான் கண்களுக்குப் பார்வை ஏற்படும் என்று கைகழுவ விட்டு விட்டனர். முன்னைய நண்பன் மாசிலாமணி மிக்க உபசரித்து வந்தான். ராணுவத்தலைமையினர், வீரனுக்கு ஏராளமான பொருள்களும், துரைத்தனத்தாருக் [illegible] 30 ஏக்கர் நிலம் சொந்த மாவட்டத்திலும் அளித்துப், போதிய பாதுகாப்புடன் சொந்த ஊர் அனுப்பச்சித்தமாயினர். அஞ்சா நெஞ்சன் ஏகாம்பரம் எல்லாவற்றையும் ஏற்க மறுத்தான். ஓர் வேண்டுகோளும் விடுத்தான். எனக்கு என்னுடைய விழிகள், குருடான நிலத்திலேயே தங்கி வாழ, உதவிக்கு ஓர் பணிப்பெண்ணும், ஏவலாள் ஒருவனும், அதற்குற்ற பொருள் உதவியும் உள்ள ஏற்பாடுந்தான் வேண்டும், வேறொன்றும் தேவையில்லை யென்றான். மேலும் கண்ணிரண்டும் ஒன்றையே காண் என்பதற்கிணங்க, எனது நாயகியைப்பார்த்துப் பழகியநான் அவளது, செவ்விய இதழையும், கெண்டை விழிகளையும், வாளினை ஒத்த புருவத்தினையும், உலகத்தையே அடகு வைத்தாலும் அவளது புன்னகைக்கு ஈடாகாத நகைமுகத்தையும், சுருங்கச் சொன்னால், அழகு என்றால் அள்ளி அள்ளி, பருகக்கூடிய ரூபலாவண்ணிய எழிலரசியைக் கண்டு, அவளோடு சரசசல்லாபத்தில் ஈடுபட்டதை யிழந்து, அவளை எந்தக் கண் கொண்டு பார்ப்பது? அல்லது அவள் தானாகட்டும் முன்போல், இந்தக் குருடனை, மனம் சகித்து, மனமார நேசிக்கிறாள் என்பதை எப்படிஎனது விழிகள்பார்க்கும்! எனவே என்னைப் பிறந்த நாட்டில் வாழ வைக்காது, இங்கு அனுப்பி இந்நிலையினை உண்டாக்கிய எனது துர்ப்பாக்கிய நாட்டில் பூமி, இல்லம், இல்லாள், யாதொன்றும் தேவையில்லை யென்றான். வேண்டுகோள் ஏற்கப்பட்டு, கூண்டுக் கிளி போல், உண்பதும் உறங்குவதுமாகக்காலத்தைக் கழித்தான். நண்பன் மாசிலாமணியும் ராணுவவேலையாகவே சுமார் 30 திங்கள் வரை, ஏகாம்பரத்திற்குத் தொண்டூழியம் புரிந்து வந்தான். ஓர் நாள் சலிப்பு மேலிட்டது, தாயகம் திரும்ப ஆவலுற்றான். ராணுவசேவையிலின்றும் விடு பட்டான், விடை கேட்டான் நண்பனை.

ஏகாம்பரத்திற்கு புன்னகை பூத்தது முகத்தில். தனது மனைவியின் பெயருக்கு முன்கூட்டியே எழுதிவைத்திருந்த லிகிதத்தை நண்பனிடம் கொடுத்து, நீ, எனக்குச் செய்த பேருதவிக்கு பரிசு இது? பிரித்துப்படி என்றான். அதன் வாசகம்:— காதல் இந்திராணிக்கு வணக்கம். நான் கண்ணிழந்தது முதல் சென்ற 30 திங்கள் வரை, என்னைப் பராமரித்து

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# லெட்சக்கணக்கான மாணவர்களிடையே நூற்றுக்கணக்கான பள்ளிகளின் முன்பு ஆயிரக்கணக்கான தொண்டர்களின் மறியல்!

## பகுதிக்கு மேற்பட்டோர் படியோம்! இந்தி என்றனர். இது ஒரு சிலர் எதிர்ப்பா? ஒரு நாட்டின் எதிர்ப்பா?

★

**தூத்துக்குடியில்**

மறியல் செய்யப் புறப்படும் போதே, போலீசார்வெறி கொண்டவர்கள்போல் அடித்து விரட்டி கைது செய்ய ஆரம்பித்துவிட்டனர். மறியல் செய்யச் சென்றவர்கள் நால்வர் ஒரு வரிசையாகவும் 100 அடி தள்ளி நால்வர் மற்றொரு வரிசையாகவும் ஆக 8 பேர் ஒவ்வொரு தடவையிலும் சென்றனர். கைதாகக் கைதாக மேலும் மேலும் தொண்டர்கள் அணி அணியாக வர மொத்தம் 95 பேர் கைது செய்யப்பட்டனர். அடி பட்டுக்கைதானவர்களுள் 7 மாத கர்ப்பிணியான ஒரு தாய்மாரும் 7 வயதுடைய 15 சிறுவர்களும் பாண்டு வாத்தியக் குழுவினரும் உண்டு.

மக்களின் உணர்ச்சி வேகத்தை கண்ட போலீசார் ரிமாண்டிலிருந்த கே. வி. கே. சாமியை அழைத்து வந்து பொது மக்களைக் கலைந்து போக கேட்டுக் கொண்டனர்.

**சென்னையில்**

மயிலை பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, செந்தோம் உயர் நிலைப்பள்ளி, சைதாப் பேட்டை உயர் நிலைப்பள்ளி, டி. டி. வி. உயர் நிலைப்பள்ளி, இந்து தியாலாஜிகல் உயர் நிலைப்பள்ளி, கோவிந்தப்ப நாய்க்கர் பள்ளி, முத்தியாலுப் பேட்டை உயர் நிலைப்பள்ளி, தியாகராயர் உயர் நிலைப்பள்ளி, ஆகிய எட்டு உயர் நிலைப்பள்ளிகளின் முன்பு மறியல் நடந்தன.

முதல் மூன்று உயர் நிலைப்பள்ளிகளுக்கு, தொண்டர்கள் வரும் வழியிலேயும், மறியல் நடத்திக்கொண்டிருக்கும் போதும், ஆக 51 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களுள் வழக்கறிஞர் டாக்டர் போன்றவர்களுமுண்டு.

பின் அய்ந்து பள்ளிகளிலும் 27 தொண்டர்கள் மறியல் செய்தனர். போலீஸ் கெடுபிடி இருந்தாலும் யாரும் கைது இல்லை.

28 பேருக்கு 3 வாரம் கடுங்காவல் தண்டனையும் 23 பேருக்கு 3 வாரம் வெறுங்காவல் தண்டனையும் மறுநாள் விதிக்கப்பட்டது.

**திருவண்ணாமலையில்.**

முனிசிபல் உயர் நிலைப்பள்ளி முன்பு மறியல் நடந்து கொண்டிருக்கும் போதே போலீசார் கைதுசெய்யும் நாடகத்தை ஆரம்பித்துவிட 7 பிரிவாக 41 பேர் சென்று,சென்று மறியல் செய்யக் கைது செய்யப்பட்டனர். கழகத்திலிருந்த தலைவரையும் அழைத்துச் சென்று கைது செய்தனர். பிறகு 144 தடை உத்தரவையும் விதித்தனர். 7 பேருக்கு 5 நாள் சிறைத்தண்டனையும் எஞ்சியோருக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டும் இருக்கிறது.

**போளூரில்**

40 தொண்டர்கள் மறியலுக்குச் செல்லும்போது வழியில் 144. வழியிலேயே தடியடிப்பிரயோகக் காட்டுமிராண்டித் தர்பார்.

**திருக்கோவிலூரில்**

உயர் நிலைப்பள்ளி முன்பு மறியல் செய்த 37 தொண்டர்களும் கைது செய்யப் பட்டனர்.

17 ம் நாள் உள்ளூர் ஆர். டி. ஓவால் 3 மாதம் 8 நாள் கடுங்காவல் தண்டனையும் கொடுக்கப்பட்டு, பின் நன்னடக்கை ஜாமீனும் கேட்கப்பட்டிருக்கிறது.

**முசிரியில்**

உயர் நிலைப்பள்ளி முன்பு மறியல் செய்து கொண்டிருந்த 31 தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

**மதுரையில்**

அய்க்கியகிருஸ்துவர்கள்உயர்நிலைப் பள்ளி, எ. ஆர். உயர் நிலைப் பள்ளி ஆகிய இரு பள்ளிகளின் முன்பும் மறியல் செய்த 21 தொண்டர்களும் மறியல் செய்து கொண்டிருக்கும் போதே கைது செய்யப்பட்டனர்.

**விருதுநகரில்**

முனிசிபல் உயர் நிலைப்பள்ளி முன்புமறியல் செய்த 12 தொண்டர்களும் மறியல் நடந்து கொண்டிருக்கும் போதே கைது செய்யப்பட்டனர்.

கோர்ட்டில் விசாரணைக் கூத்து வேறு நடந்து தலா 4 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

**கிருஷ்ணகிரியில்**

உயர் நிலைப்பள்ளி முன்பு 2 தடவையில் 11 தொண்டர்கள் மறியல் செய்து கைதாயினர். 2ம் பாரம் பி வகுப்பு மாணவர் அனைவரும் இந்தி வகுப்பை விட்டு வெளியேறினர்.

**சாத்தூரில்**

எட்வர்ட் உயர் நிலைப்பள்ளி முன்பு மறியல் செய்து கொண்டிருந்த 8 தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

**பவானியில்**

போர்டு உயர் நிலைப்பள்ளி முன்பு 8 தொண்டர்களின் மறியல். போலீசார் இரண்டு வேளையிலும் கைது செய்து அரை மணி நேரத்தில்போகச் சொல்லி விட்டனர்.

**ஆ. தெக்களூரில்**

விசாலாட்சி கலாசாலை முன்பு மறியல் செய்த ஆறு தொண்டர்களும் பின்பு கைதுசெய்யப்பட்டனர்

**கடையநல்லூரில்**

போர்டு உயர் நிலைப்பள்ளி முன்பு 6 தொண்டர்கள் மறியல் செய்து கைதாக்கப்பட்டு 10 நாள் ரிமாண்டில் இருக்கின்றனர். அன்றே தோழர் எஸ். பி. சுப்பையா என்பவரைச் சில காலிகள் தாக்கினர். இதை அறிவித்தும் போலீசார் ஏன் என்று கேட்கவில்லை.

**ஈரோட்டில்.**

சர்க்கார் உயர்தரப் பாடசாலையின் முன்பு 6 பெண்தொண்டர்கள் மறியல்.

மகாஜன உயர்நிலைப்பள்ளி, போர்டு உயர்நிலைப்பள்ளி, செங்குந்தர் உயர் நிலைப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளிலும் 52 தொண்டர்கள் மறியல் செய்தனர்.

**சோழவந்தானில்.**

உயர்நிலைப்பள்ளி முன்பு 20 தொண்டர்கள் மறியல் செய்தனர்.

**குடந்தையில்.**

நகர உயர் நிலைப்பள்ளி முன்பு 17 தொண்டர்களின் வெற்றிகரமான மறியல். மறியலைக்காண 5000 க்கு மேற்பட்ட பொது மக்கள்! மாணவர்களின் பேரெழுச்சி! சிலர் காங்கரஸ் கொடி ஏந்தி கட்டாய இந்தி வேண்டும் என்றனர்.

**வந்தவாசியில்.**

போர்டு உயர் நிலைப்பள்ளி முன்பு 8 தொண்டர்களின் மறியல். 50 மாணவர்கள் இந்தி ஏடுகளை நெருப்பிலிட்டனர். காலையில் 98, பிற்பகலில் 133 மாணவர்கள் பள்ளியிலிருந்து

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

# திருப்பதிதாசன் திருக்கனவு!

[★]

ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! ஸ்ரீ வைகுண்டவாசா! ஸ்ரீனிவாசா! ஏழுமலை! எம்பெருமானே! வாரும், வாரும், இந்த ஆசனத்தில் அமரும்! தங்களின் வருகையால் தன்யனானேன். போன வாரந்தானே தங்கள் சந்நிதிக்குக் குடும்ப சமேதனாய் வந்து முடிவாங்கி உண்டி செலுத்தி வந்தோம்...ஒன்றுமறியாத ஏழை, என் பேரில் இவ்வளவு சினம்...

சட்...வாயை மூடு! பாமரரை ஏய்க்கும் நீ, என்னையே ஏமாற்றிவிட்டாயே? நீ பிளாக் மார்க்கட்டில் சம்பாதித்த 14-ஆயிரத்தையும் துண்டாக எடுத்து வைத்துவிட்டு ரூபாய்க்கு 0—2—0-வீதம் 6-ஆயிரத்திற்குத்தானே உண்டியில் செலுத்தினாய், அன்றே உன்னை அரசாங்கத்திற்கு காட்டிக்கொடுத்திருந்தால்...? நீ என்னிடம் வேண்டிக்கொண்டபடி பூராத் தொகைக்கும் 0—2—0-வீதம் தானே செலுத்தவேண்டும்...? உன் சூதுக்கு என்ன சொல்லப் போகிறாய்.

ப்ரபூ மன்னிக்கவேண்டும்! அபசாரம் செய்துவிட்டேன்! நாளையே தங்களுக்குச் செலுத்தவேண்டிய மீதித் தொகையைத் திருப்பதிக்கு வந்து செலுத்தி விடுகிறேன்.

ஹா...ஹா...ஒரே சிரிப்பு.

உட்கார்...பரவாயில்லை உட்கார்! அப்பா! இந்த ஆரியர்கள் செய்யும் அட்டகாசமே கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அவர்களின் அகங்காரங்கள் என்றுதான் மறைக்கப்படுமோ தெரியவில்லை. என் பிதாவும், மாதாவும் எந்த எந்த சாதியென்று எனக்கே தெரியாது. சாதி மதத்தையே வெறுக்கும் எனக்கும், ஒரு பூணூல் போட்டு என்னை ஒரு ஆரியக்கடவுள் என்று கொக்கரிக்கிறார்கள். இந்த ஆண்மையில்லா ஆரியம், உழைப்பாளிகளின் ரத்தத்தை உறிஞ்சி விலாப் புடைக்க உண்டு களித்து, என் பெயரால் அகப்பட்டதைச் சுருட்டி, மேலுலகத்திற்கு அழைத்துப்போவதாக உரைத்து ஏய்க்கின்றனர். உருக்குலைந்த உருவுடன், ஊர் ஊராய்ச் சென்று திவசம், திதி என்றும் தர்ப்பையைக் காட்டி உண்டு கொழுக்கிறது. இவைகள் என் கண் மறைவாய் நடைபெறும் கூத்து. ஆனால் என் திருப்பதிச் சன்னிதியிலே, என் பெயரால் வீண் பேச்சுப்பேசி, கர்மம் என்று கதை அளந்து, தர்ப்பையைக் காட்டித் தனத்தைப்பறித்து, வேதம் என்று விபூதியையும் துளசியையும் காட்டி, அர்ச்சனைக்கும், ஆராதனைக்கும் ஆலிங்கனத்திற்கும் பணம் பறிக்கின்றனர்.

நீ, எனக்குத்தான் உண்டியை நிரப்பினாய் என்று நினைக்கிறாயா? இல்லை. என் பெயரால் அவர்கள்தான் முந்திரி, திராட்சை நிறைந்த பால்பொங்கலை உண்டு களித்து உறங்குகிறார்கள். நீங்கள் கொண்டுவந்து போடும் ஆபரணங்களையும், நகைகளையும், தங்கள் காமக்கிழத்திகளுக்குப்போட்டு அழகு பார்க்கிறார்கள்.

ஆனால் நான்கண்டு அனுபவிப்பது, செடி, கொடி முளைத்த கோபுரம், முள் முளைத்த பிரகாரங்கள், பாசி படர்ந்த தடாகங்கள், வௌவால் புழுக்கை நிறைந்த மண்டபம், பொரி கடலை சிந்திய படிகள், மினுக்கு மினுக்கெனும் தீபம், புகை நிறைந்த மூலஸ்தானம், நாற்றம் வீசும் தீர்த்தத் தொட்டிதான். என் மேல் போர்த்தப்பட்ட பீதாம்பரமோ விலை உயர்ந்ததுதான், ஆனால் எண்ணைக் கசடேறிய சிக்கல் வாடை. ஆனால் நெற்றியிலோ வைரத்தில் வெள்ளை நாமம், கெம்பில் சிகப்பு நாமம்!

ஒரு அர்ச்சகன், என் மனைவி அழகாக அணிந்திருந்த வைர மூக்குத்தியை திருடிக்கொண்டு போய் காமக்கிழத்திகளில் ஒருத்திக்குப் போட்டுவிட்டு திருட்டுப்பழியை வேலை செய்துகொண்டிருந்த பண்டாரத்தின் பேரில் காட்டி 6-மாதம் அனுப்பிவைத்தான். இந்த மாதத்தில் நாவிதர்களுக்கு நல்ல வருமானம் என்றறிந்த குருக்களில் ஒருவன், அரசாங்க வேலையில் அமர்ந்திருக்கும் தன் அத்திம்பேருக்கு, இனி திருப்பதியில் தன் இனத்தவர்களே நாவிதத் தொழிலை ஏற்கவேண்டும் என்ற ஒரு புதுச் சட்டத்தை ஏற்படுத்தும்படி தபால் எழுதுவதாகச் சொன்ன விஷயமும் எட்டியது.

ஆரியத்திற்கு அடிவருடும் நீங்களாவது எதையும் சிந்திக்கிறீர்களா? நீ என் சந்நிதிக்கு வந்து ஊர் திரும்பியதும் 60-தாதர்களுக்குச் சாப்பாடு போட்டாய். ஆனால் அரசாங்க உத்தியோகஸ்தன் எவனாவது உன்னிடம் வந்து இந்த ரேஷன் காலத்தில் உனக்கு இவ்வளவு அரிசி எப்படிக் கிடைத்தது? நீ பிளாக் மார்க்கட்டில் வாங்கினாயே, உன்னைத்தண்டனைக்குள்ளாக்குகிறேன் என்று சொன்னார்களா? லஞ்சத்தைப் போக்கப் போகிறோம், பிளாக்மார்க்கட்டைப் பிளக்கப் போகிறோம் என்று வெரட்டுக் கூச்சல் போட்டும் அரசாங்கம், இந்த வெளிப்படையான பிளாக்மார்க்கட்டைக் கவனித்ததா?

நீ தான் அன்னம் அளித்தாயே, ஒரு கூன், குருடு, முடம் கிழத்திற்கு அளித்தாயா? மஞ்சள் உடை உடுத்தி, கையில், சங்கு சேமகலம் வைத்துச் சாவுவீட்டில் அடிப்பதுபோல் அடித்த சோம்பேறிகளுக்குத்தானே போட்டு, அவன்கள் கால்களில் வீழ்ந்தாய்—மஞ்சள் ஆடைதரித்து தெருவில் உருண்டு கொண்டு என் நாமத்தைச் சொல்லி சம்பாதிக்கும் திருட்டுத் தடியர்களை அன்று பரோபகாரத்துடன் அழைத்து அன்புடன் அன்னம் அளித்தாயே—என் சந்நிதிக்கு-நீ, உன்மனைவி, குழந்தைகளுடன் வந்து மொட்டை அடித்துக் கொண்டீர்களே, 'எந்த ஆரியனாவது மொட்டை அடித்துக் கொண்டானா? இல்லை?—எல்லாம் அந்த சதிகாரக் கும்பலின் போலி வியாக்யானம் தானே.

இந்தப் போலிப்புரட்டுகள் மாள, அநீதி திட்டங்கள் அழிய, அக்கிரம விஷயங்கள் அகல, அபாரப் புளுகர்கள் மறையத்தான் இந்நாட்டில் 70 ஆண்டிற்கு முன் என் அவதாரத்தில் ஒரு அவதாரம் எடுத்துள்ளேன். இந்த எழுபது ஆண்டில் கிழடு தட்டினாலும் வீரஇளஞ் சிங்கம் தான். அந்த அவதாரம் தான் ஈரோட்டு பெரியார்—என் எல்லா அவதாரங்களையும்விட இந்த அவதாரத்தில் தான் பூர்ண வெற்றி காணப்போகிறேன்—ஆரியத்தை அழித்த கௌதமரையும், பகுத்தறிவு உணர்ச்சி ஊட்டிய சாக்கரட்டீசையும், பொருளாதாரச்சீரமைப்புத் திட்டத்தில் லெனினையும், மனிதன் மனிதனாகவாழ முயற்சி எடுத்து வென்ற ஸ்டாலினையும், அகிம்ஸாமூர்த்தி காந்திமகான் ஆகிய இவர்களையும் மீறி விட்டது இந்த ஈரோட்டவதாரம். கூடிய சீக்கிரம் ஏமாற்றித்திரியும் கும்பலுக்கு குழிதோண்டப்போகிறது—ஆரியம் என்ற அச்சகமே அழிந்துவிடப்போகிறது இந்நாட்டில்-ஆரியத்திற்கு அடிகோலும் விபீஷணர்களும்...வெட்கம்...அவன் பெயரைச் சொல்லவே, மனம் கூசுகிறது-உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த மகா பாதகன் சண்டாள சுக்ரீவன், ஆண்மையில்லா அனுமார், குரங்கு அத்தனைபேரும் கூடிய சீக்கிரம், என் அவதாரப் பெரியாரின் காலடியில் வந்து விழப்போகிறார்கள்—ஆனால் நீ, அவரை, வேறுயாரோ என்று நினைத்துவிட வேண்டாம்—அகங்கார ஆரியர்களை அழிக்கத்தான் இந்நாட்டில் பெரியார் அவதாரம் எடுத்துள்ளேன்-தன்மானத்தியாகிகள் யாவரும் என்பக்தர் தான்...அட ரொம்ப நேரமாகிவிட்டது...இந்த மாதத்தில் மட்டும் ஏமாளிகளை ஏமாற்ற 6 கால பூசை. சரிவருகிறேன்—நான் தான் பெரியார் என்பதை மறந்து விடாதே! உன்னாலான உதவியை அவருக்கு செய்......"

(மறைந்து விட்டார்)

"அப்பா! அப்பா! என்னப்பா, இன்

# மாபெருந்தலைவர் மறைந்தார்!

★

இருபதாம் நூற்றாண்டில் இந்திய உபகண்டத்தில் இஸ்லாமிய இன அரசை அமைத்த மாவீரர் காயிதே ஆஜம் முகம்மது அலி ஜின்னா மறைந்து விட்டார்! அரசு இழந்து அடிமையாக வாழ்ந்த ஒன்பது கோடி இஸ்லாமிய மக்களின் விடுதலைக்காகப் போராடி, தனியரசு அமைத்த விடுதலை வீரர் காலமாகி விட்டார்!

இஸ்லாமிய உலகம் இன்று ஒரு மாபெரும் தலைவரை இழந்து விட்டது! இந்திய அரசியல் அரங்கம் மற்றொரு தலைவரை இயற்கைக்குப் பலி கொடுத்து விட்டது! உலக விடுதலை வீரர்களில் உன்னத ஸ்தானம் வகிக்கவேண்டிய உத்தமர் உயிர் துறந்துவிட்டார்! பாகிஸ்தான் மக்கள் தங்கள் தந்தையை இழந்து தவிக்கின்றனர்! அவருடைய பிரிவு பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, இஸ்லாமிய உலகிற்கும், இந்திய உபகண்டத்திற்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டம்.

1948ம் ஆண்டு, இந்திய வரலாற்றில் ஒரு துயரம்நிறைந்த சோகஏடு. இந்த ஒரே ஆண்டில், இந்தியாவில் இரு அரசுகளை அமைப்பதற்காக போராடிய இரண்டு தலைவர்களையும் இந்தியா இழந்து விட்டது. இந்தியா ஓரளவு சுதந்தரம் பெற்று, ஓராண்டு முடிவதற்குள்ளாகவே அதற்காகப் பாடுபட்ட காந்தியாரைக் கொலைகாரன் கோட்ஸே சுட்டுக்கொன்று விட்டான்! மக்களின் விடுதலைக்காக உழைத்த காந்தியார் மதத்தின் பலி பீடத்தில் "காவு" கொடுக்கப் பட்டு விட்டார்! மதவெறி, மாண்பு மிக்க தலைவரின் உயிரைக் குடித்து விட்டது. இந்தியாவில் பாகிஸ்தான் தனியரசுக்காகப் போராடி, பாகிஸ்தான் அரசையும் அமைத்து ஓராண்டு சென்று மறுதிங்கள் மறையுமுன், அதன் சிருஷ்டி கர்த்தாவான ஜின்னா மறைந்து விட்டார். இந்தியாவிற்கு ஏற்பட்டது போன்ற துரதிர்ஷ்ட நிலை வேறு எந்த நாட்டிற்குமே ஏற்பட்டதில்லை.

இந்திய உபகண்டத்தின்பெரும் பகுதியை அக்பர், கனிஷ்கர் போன்ற இஸ்லாமிய அரசர்கள் ஆண்டிருந்தனர் என்பது ஒரு பழம் கதையாகவே முடிந்து விட்டது. ஆக்ராவில் அழகான தாஜ் மகால், அழியாத நினைவுச் சின்னமாக விளங்குகின்றது. அது உலக அற்புதங்களில் ஒன்றாகவும்இருக்கிறது. காதல் கண்ணீரில் உருவாகிய தாஜமகாலை நிர்மாணித்தவர் ஷாஜஹான் என்ற முஸ்லிம் அரசர்தான். டில்லியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட இனத்தின் வழிவந்த இஸ்லாமிய மக்கள் காலத்தின் மாறுதலால் ஆங்கிலேயருக்கு அடிமையாகினர். காலப் போக்கில் கருத்திழந்து அடிமையாக வாழ்ந்த இந்திய இஸ்லாமியர்களிடையேதான் விடுதலை வீரன் ஜின்னா பிறந்தார். அவருடைய பிறப்பினால் இஸ்லாமியர்கள் விடுதலையடைந்தனர்—பெருமையும் அடைகின்றனர். எந்த கராச்சி நகரத்தைத் தலைநகராகக்கொண்டு பாகிஸ்தான் அமைந்திருக்கிறதோ அதே கராச்சியில் 1876-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 தேதி, செல்வமும் சிறப்பும் வாய்ந்த முஸ்லிம் கோஜாவம்சத்தில் பிறந்தார். இஸ்லாமிய உலகத்தின் இணையற்ற வீரனாகிய துருக்கியின் சர்வாதிகாரி முஸ்தாபாகமால்பாஷா பிறப்பதற்கு நான்கு ஆண்டுகள் முன்னதாகவே பிறந்தார் ஜின்னா. அய்ரோப்பாவின் நோயாளி என்று கருதப்பட்டுவந்த துருக்கியைத் தட்டியெழுப்பி விடுதலை பெற்றதில் முதன்மையானவர் முஸ்தாபா கமால் பாஷாவே தவிர வயதில் அவர் ஜின்னாவின் இளவல்தான்.

பழம் பெருமை பேசிக்கொண்டு சிதறுண்டு கிடந்த இஸ்லாமிய மக்களை இனததின் அடிப்படையில் ஒன்று திரட்டி, இழந்த அரசைப் பெற பாகிஸ்தான் கோரிக்கையை எழுப்பினார். 1940—லாகூரில் கூடிய முஸ்லிம் லீக் மகாநாட்டில் தான் முஸ்லிம் லீக்கின் லட்சியக் கோரிக்கை பாகிஸ்தான் என்று பிரகடனப்படுத்தப்பட்டது. நம் "தமிழ் நாடு தமிழருக்கே" (திராவிட நாடு திராவிடருக்கே) என்ற தனியரசுக் கோரிக்கையை எழுப்பிய இரண்டாண்டு சென்ற பின் எழுந்த பாகிஸ்தான் கோரிக்கை, ஏழு ஆண்டுகளிலேயே வெற்றி பெற்றுவிட்டது. இஸ்லாமிய மக்களிடையே உள்ள அய்க்கிய உணர்ச்சியும் ஜின்னாவின் கலங்காத உள்ளமும்—உழைப்பும்தான் காரணம். அவர் பாகிஸ்தான் கேட்டார்; இந்த நாட்டு இந்துக்களிடமல்ல, முஸ்லிம் அரசர்களிடமிருந்து நாட்டைப் பிடுங்கிக் கொண்ட வெள்ளையனிடம் கேட்டார். அதற்காகச் சளையாது போராடினார். அந்தக் காலத்தில் பாகிஸ்தான் கோரிக்கையை நையாண்டி செய்தும், ஏசியும், ஏளனமாகப் பேசியும் வந்தவர்கள் வெட்கித் தலைகுனியும்படி வெற்றியும் பெற்றார்.

விடுதலை வீரர் ஜின்னாவை இந்த நாட்டுத்தேசியவாதிகள் நாக்கில் நரம்பின்றித் தூற்றினார்கள். பாகிஸ்தான் கோரிக்கையைத் தோல்வியடையச் செய்ய "தேசிய முஸ்லிம்"கள் என்ற அய்ந்தாம்படைக் கூட்டத்தினரையும் ஏற்படுத்தினார்கள். பாகிஸ்தானை எதிர்த்தவர்களின் நியாயமற்ற எதிர் வாதங்களைத் தூள் தூளாகத் தகர்த்தெறிந்தார். எந்த எதிர்ப்புச் சக்தியைக் கண்டும் கலங்காது போராடி பாகிஸ்தானை நிர்மாணித்தார்.

அகில உலக அரசியல் நிபுணத்துவம் பெற்றவர்கள் தாங்கள் என்று கருதிக்கொண்டு, மண்டைக் கர்வம் கொண்ட தேசிய எழுத்தாளர்கள், முஸ்லிம்களின் பிறப்புரிமையாகிய பாகிஸ்தான் கோரிக்கையை, பகற்கனவு என்று எழுதிவந்தனர். அந்தப் பகற்கனவையும்நினைவாக்கித்தேசிய எழுத்தாளர்களின் மண்டைக் கர்வத்தை ஒழித்ததுடன் அவர்களின் அரசியல் ஞான சூன்யத்தையும் அம்பலப்படுத்தி விட்டார் ஜின்னா.

"முஸ்லிம் லீக் தீர்க்கமாக யோசித்தே பாகிஸ்தான் தீர்மானத்தை லாகூரில் நிறைவேற்றியது. இந்த பாகிஸ்தான் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது; உலக முடிவுவரை அது இருந்தே தீரும். நமக்கெனச் சொந்த நாடு இருக்கிறது; அதை வேண்டுமென்றுதான் முஸ்லிம் லீக் கேட்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

---

னும் தூங்கறே! நாம், திருப்பதியிலே வாங்கி வந்த தீர்த்தத்தை வேணும்னு பக்கத்துவீட்டு அய்யர் வந்திருக்கார்.

"ஆதவன்"

குடி அரசு

25—9—48 சனிக்கிழமை.

# பெரியார் தலைநகரில் பெரும்படை சேருவோம், வாரீர்!

"அப்பாடா! எத்தனை நாள்—எத்தனை மாதம் ஆகுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். நல்ல வேளையாக நைஜாம் மன்னர் வெகு புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு விட்டார்! ஹைதராபாத் அட்டூழியம் ஒழிந்தது!! அது, சரி! இனி எப்போது நடுது இந்தி எதிர்ப்பு மறியல்? என்று முதல் ஊர் பூராவும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம்? இனி மந்திரிமார்களுக்குக் கருப்புக் கொடி பிடிக்கலாம் அல்லவா?" என்பன போன்ற பேச்சுக்கள் பேசாத ஊரில்லை; கேட்காத திராவிடத் தோழர்கள் இல்லை. இந்நிலைமையை நன்கு தெரிந்த நமது படைத் தலைவர் பெரியார் அவர்களும் மிகப் பூரிப்படைவதோடு மீண்டும் இந்தி எதிர்ப்பு மறியல் துவக்குவதற்கு முன்பு நாட்டிலுள்ள தோழர்கள் அனைவரையும் அழைத்து—கலந்து பேசி—முன்பு நடத்திய தைக்காட்டிலும் இன்னும் நல்ல விதமாகப் போராட்டம் துவங்கத் திட்டமிட்டிருக்கிறார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஹைதராபாத் சரணாகதியடைந்தாலும், அங்கு இன்னும் 3 வாரங்களுக்கு ராணுவ ஆட்சிதான் தொடர்ந்திருக்கும் என்பதும் உயர்நிலைப் பள்ளிகளுக்கெல்லாம் 2 வாரம் 'தசரா' விடுமுறை சமீபத்தில் விடப்பட இருக்கிறது என்பதும் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டியவைகள்.

நிற்க, சென்ற 15—9—48ம் தேதி நாடு பூராவும் அடையாள மறியல் எதிர்பார்த்த அளவுக்குப் பன்மடங்கு சிறப்பாக நடைபெற்றிருப்பதைக் கண்டு பெரியார் அவர்கள் ஆச்சரியப்பட்டு விட்டார்கள் என்று சொன்னால் மிகையாகாது. ஆனால் அதே சமயத்தில் இன்னொரு உண்மையையும் கண்டு கொண்டார் நம் பெரியார்.

இந்தத் தடவை அதாவது 10—8—48ம் தேதி இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவங்கும்போது நமது பெரியார் அவர்கள் "இந்தப் போராட்டமானது வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துச் செய்கிற காரியமாகும். ஆகையினால் இது சமயம் யாரும் பார்ப்பனர்களைப் பற்றி எதுவும் சொல்லாதீர்கள்" என்று வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார்கள். அப்படியிருந்தும்கூட இந்நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களது பிறவிக்குணத்தை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. நமது இந்தி எதிர்ப்புக் காரியத்திற்கு ஆங்காங்கு உள்ள டவரா, டம்ளர் கழுவி வாழுகிற பார்ப்பனர் முதல் பெரிய, பெரிய பதவியிலிருக்கிற பார்ப்பனர் வரை எல்லோருமே கட்டுப்பாடாக நமக்குத் தொல்லை கொடுத்துவர ஆரம்பித்து விட்டார்கள். இதை நமது தோழர்கள் யாராவது பெரியார் அவர்களிடம் கூறினால்கூட நம்பாமல் இருந்து வந்தார். ஆனால் நாடு பூராவும் அடையாள மறியல் 15—9—48 தேதி நடைபெற்ற போது உண்மை விளங்கிவிட்டது. அது என்னவென்றால், எங்கெங்கு பார்ப்பனப்போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தான் நமது தோழர்களுக்கு அடியும், அரஸ்டும், மற்றும் பலவித அவஸ்தைகளும் ஏற்பட்டிருப்பதைக் கண்டு கொண்டார் நம் பெரியார். இனி நமது போராட்டத்திலும் சில மாறுதல்கள் செய்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டார்.

அதற்காகவே அவசர, அவசரமாக எவ்வளவோ அசௌகரியங்கள் இருந்த போதிலும் கூடிய சீக்கிரம் ஒரு ஸ்பெஷல் கான்பரன்ஸ் அதாவது அவசர மாகாணத் தனி மாநாடு கூட்டவேண்டும் என்று விரும்பினார்கள். அந்தக் கான்பரன்ஸை ஈரோட்டிலேயே நடத்த வேண்டும் என்றும்; பெரியார் அவர்கள் சம்மதம் கொடுத்து விட்டால் உடனே அதற்கான காரியங்களை மளமளவென்று கவனிக்கிறோம் என்றும் ஈரோட்டுத் தோழர்கள் பெரியார் அவர்களை வேண்டிக்கொண்டார்கள்; பெரியார் அவர்களும் அனுமதியளித்து விட்டார்கள்; வரவேற்புக் கமிட்டி கூட்டுவிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நமது தோழர் எம். கே. குகநாதன் அவர்களும், மற்றவர்களும் நேற்று முன்தினமிருந்தே உள்ளூரில் வரவேற்புக்கழக அங்கத்தினர்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டு விட்டனர், வரவேற்புக் கழக அங்கத்தினர் ஒவ்வொருவரிடமும் ரூ 10—0—0 வீதம் பணம் வசூலித்து வருகின்றனர். இன்னும் இரண்டொரு தினங்களில் வரவேற்புக் கமிட்டி கூடி மற்ற சகல சங்கதிகளையும் முடிவு செய்யும்.

மாநாடு வெகு குறுகிய காலத்தில் நடை பெற இருப்பதாலும், மாநாடு சம்பந்தமாக ஏராளமான வேலைகளை ஈரோட்டிலிருந்து கொண்டே கவனிக்க வேண்டி இருப்பதாலும், மாநாடு சம்பந்தமாக வசூலுக்கென்று யாரும் வெளி ஜில்லாக்களுக்கு வருவதாக இல்லை.

ஆகவே அந்தந்த ஊர்த் தோழர்களே "எங்களுக்கு இத்தனை வரவேற்புக்கமிட்டி டிக்கட் வேண்டும், இத்தனை பிரதிநிதி டிக்கட் வேண்டும்," என்று எழுதிமுன்னதாகவே பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். மற்ற மாநாடுகளுக்கு வந்தது போல் இதற்கும் நம் ஊருக்கு வசூலுக்காக வருவார்கள்— அப்பொழுது வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணிப் பிறகு ஏமாந்து விடாதீர்கள் என்பதற்காகவே இவ்வளவு தூரம் கூற ஆசைப் படுகிறோம்.

தோழர்களே! இன்றுமுதலே மாநாட்டுக்குப்புறப்பட ஆயத்தமாகுங்கள்! மாநாட்டுத் தேதியை எதிர் பார்த்திருங்கள்! மாநாட்டின் விபரம் அறிவிக்கப் பட்டவுடன் உங்கள் வரவைக் குறித்து வரவேற்புக் கமிட்டியாருக்குத் தெரிவித்து விடுங்கள்! பெரியார் தலைநகரில் பெரும் படை சேருவோம் வாரீர்! வாரீர்!! என்று இருகை கூப்பிஅழைக்கிறோம்.

# போன மச்சான் திரும்பி வந்தார்!

—()●()—

வடநாட்டு ஆதிக்கம் ஒழிக! என்று நாம் சொன்னால், நம்மை நாட்டைத் துண்டாட விரும்பும் துரோகிகள் என்று கூசாமல் கூறுகிறார்கள். யார் வடநாட்டுக்காரனா?—இல்லை. இந்நாட்டில் வாழும் பார்ப்பனரா?—இல்லை. நாம் யார் நன்மைக்காகக் கூறுகிறோமோ அதே திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் கதர்ச்சட்டைப் போட்டுக்கொண்ட தோஷத்திற்காக—கிடைத்த பதவி போகாமலிருப்பதற்காகக் கூறுகிறார்கள்.

எதுவும் அவரவர்களாகவே அனுபவித்தால்தான் தெரியும். நமது பிரதமர் ரெட்டியார் அவர்கள் அனுமானில் ஏறிக்கொண்டு பறந்தார் டெல்லிக்கு. வழியிலேயே "சகுனத் தடை" ஏற்பட்டது. அதாவது அனுமான் பறக்காமல் கீழே இறங்கிக்கொண்டது. "சகுனத்தடை"யையும் லட்சியப்படுத்தாமல் ரயிலில் போய்ச் சேர்ந்தார் டெல்லிக்கு நமது பிரதமர்.

அங்கே கிடைத்த பதில் என்ன தெரியுமா? சென்னை மாகாணத்துக்குத் தேவையான அரிசி கொடுக்க முடியும் என உறுதிகூற முடியாது.

பூர்ண மதுவிலக்குச் செய்வதானால் வரவு, செலவைச் சரிக்கட்ட எங்களை (மத்திய சர்க்காரை)ப்பணம் கேட்கக் கூடாது.

ஜமீன்தாரர்களை ஒழிப்பதனால் நஷ்ட ஈட்டுத் தொகைக்கு எங்களை (மத்திய சர்க்காரை)ப் பணம் கேட்கக்கூடாது. (இதே மத்திய சர்க்காரில் உள்ள காங்கரஸ் ஹைகமாண்டுகள் தான் ஜமீன்தாரர்களுக்கு நஷ்டஈடு தாராளமாகக் கொடுக்கவேண்டும் என்று புத்தி சொன்னவர்கள் என்பதை இது சமயம் ஞாபகப்படுத்த விரும்புகிறோம்)

மேற்சொன்ன பதில்களைக் கேட்ட நமது பிரதமர் ரெட்டியார் மனம் எப்படியிருந்திருக்கும்? சிந்தித்துப்பாருங்கள். கட்டாயம் அந்த இடத்தில் பிரதமர் ராமசாமி அவர்கள், பெரியார் ராமசாமி அவர்களை நினைத்திருப்பார்! வடநாட்டு ஆதிக்கம் ஒழிக! என்றுகூட மனதில் எண்ணியிருப்பார். ஆனால் வாய்விட்டுச் சொல்ல முடியுமோ? சொன்னால் தொலைந்ததே பிரதமர் பதவி! உடனே வந்து விடும் 93வது செக்ஷன். அப்புறம் யாருடைய தர்பார் தெரியுமோ? சாட்சாத்பவநகர் மஹாராஜா ஆட்சிதான்! அதையும் நினைத்திருப்பார். வாய்மூடி மௌனியாக வந்து சேர்ந்து விட்டார். எப்படி சமாளிப்பாரோ? பார்ப்போம்.

பிரதமர் ரெட்டியார் அவர்கள் வட நாட்டாருக்கு முகத்திலடித்த மாதிரி "பண நெருக்கடி நேரத்தில், எங்கள்நாட்டில் இந்திக்காகஎதற்கு வீண் செலவு? பெரிய எதிர்ப்பு!" என்று கூறி இந்திக்காகத் தனது சர்க்கார் ஒரு செல்லாக்காசும் செலவு செய்ய முடியாது என்று கூறுவாரா? பார்ப்போம்!

●

## வருந்துகிறோம்.

நமது இயக்கத்தில் தீவிர வாதியும் தோழர் சி. டி. டி. அரசு அவர்களின் தந்தையாருமான தோழர் தேவராசு அவர்கள் காஞ்சிபுரத்தில் சில திங்களாக நோய்வாய்ப் பட்டிருந்து இயற்கையடைந்ததற்கு நமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## ஈரோட்டில்
## பெரியார் பிறந்த நாள் விழா
### ஊர்வலமும் பொதுக்கூட்டமும்.

22—9—48ம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 3மணிக்கு 50 சைக்கில்கள் கொண்ட ஊர்வலம் தோழர் பி. ஷண்முக வேலாயுதம் தலைமையில் தொடங்கி 6 மணி சுமாருக்கு காரை வாய்க்கால் வந்தடைந்து பின் சில தோழர்கள் பாடல்கள் பாடியதும், ஈரோடு நகர திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எம். கெ. குகநாதன் தலைமையில் பெரியார் 70வதுபிறந்த தினக் கூட்டம் தொடங்கியது. தோழர்கள் சுப்பையன் என். இ. பாலகுரு, சேலம். எ சித்தையன் ஆகியோர் பெரியார் சிறப்புபற்றியும் தொண்டு பற்றியும் விளக்கமாகப் பேசினார்கள். தலைவர்முடிவுரைக்குப் பின் கூட்டம் முடிந்தது.

## நடக்க இருப்பவை.

27—9—48-ம் நாள் திருச்சி டாக்டர் க. பிச்சைமுத்து அவர்கள் மகன் வீரமணியும், தாராபுரம் க. சங்கர் அவர்கள் மகள் செல்வ ராஜம்மாளும், திருச்சி திராவிட மருத்துவர் கழக 99-ம் இல்லத்தில், வழக்கறிஞர் வேதாசலமவர்கள் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொள்வார்கள்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது. அதை நம்மிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்கள்; அதைத் திருப்பி நம்மிடம் அளிக்கவேண்டுமென்றே கேட்கிறோம். இந்துக்களுக்கு இதில் என்ன சம்பந்தம்? முஸ்லிம்களுக்குத் தனியரசு அளிப்பதால் இந்துக்களுக்குத்தான் நன்மை. முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள இடங்களில் முஸ்லிம் அரசாங்கம் அமைக்கப்படவேண்டுமென்றும், இந்துக்கள் பெரும்பான்மையாகவுள்ள இடங்களில் இந்துக்கள் அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் கேட்கிறோம். இதில் ஆட்சேபமென்ன? இந்துக்களே இந்தியா முழுவதும் கட்டியாள விரும்பினால் அது முடியாத காரியம். இந்துக்கள் தென்புறத்தையும், மேற்குப்புறத்தையும் பாதுகாக்கட்டும்; முஸ்லிம்கள் எல்லைப் புறத்தைக் காக்கட்டும். அப்போது "இந்தியா இந்தியருக்கே" என்று ஒன்றுபட்டு நாம் உலகத்துக்குச் சொல்வோம்" என்று 12—3—41-ல் அலிகார் சர்வகலாசாலை சங்கச் சார்பில் நடந்த ஒரு கூட்டத்தில் ஜனாப் ஜின்னா பேசியிருக்கிறார்.

மேலேகண்ட அவருடையபேச்சு தார்க்கீதியாகப் பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானதென்றுவிளக்குவதுடன், அவருக்குதங்களுடைய லட்சியத்தில் இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையையும், மன உறுதியையும்காட்டுகிறது. பாகிஸ்தான் அமைந்ததற்குக் காரணம் அவருடைய வீரமிக்கபேச்சுகளும், மலை குலைந்தாலும் மனம் குலையாதஉறுதியும்தான். மகம்மதுஅலி ஜின்னாவின் உழைப்பின்-தியாகத்தின் பிரதி பலிப்புத்தான் பாகிஸ்தான். தன் உழைப்பெனும் நீரை ஊற்றிப்பாகிஸ்தானை உருவகப் படுத்தியஉத்தமர் ஜின்னா 11-9-48 ம் தேதி இயற்கை எய்தி விட்டார். அவர் உலக வாழ்வினின்று மறைந்து விட்டாரே தவிர மக்கள் உள்ளத்தைவிட்டு அகல முடியாத உன்னத இடம் பெற்று விட்டார். ரஷ்யாவை நினைக்கும் பொழுது லெனினும் ஸ்டாலினும் நம் முன் தோன்றுகின்றனர். அயர்லந்தை நினைக்கும் பொழுது அந்த டிவேலராவும், துருக்கியை பார்க்கும் பொழுது முஸ்தாபா

கமால் பாஷாவும் தோன்றுகின்றனர். உலகம் இந்துஸ்தானை பார்க்கும் பொழுது காந்தியைப் பார்க்கின்றனர். பாகிஸ்தானைப் பார்க்கும் பொழுது அதன் சிருஷ்டிகர்த்தவான ஜின்னாவின் உருவத்தை நாம் மனக்கண்முன் காண்கின்றோம். பாகிஸ்தானும் ஜின்னாவும் உலகத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பார்கள்.

பாகிஸ்தானை நிர்மாணித்தவர் மகம்மது அலி ஜின்னா என்பதை மறைக்கவே—மறக்கவேமுடியாது. இந்த மாபெரும் உண்மையை மறைக்கப்பார்க்கிறது தேசிய ஏடான சுதேசமித்திரன். ஜின்னாவின் மரணத்தைப்பற்றி எழுதியுள்ள தலையங்கத்தில் பாகிஸ்தானை நிர்மாணித்தவர்கள் வெள்ளையர்கள்தான் என்று பொருள்படும்படியாக எழுதியுள்ளது. ஆரிய எழுத்தாளரின் ஈனத்தனம் இன்னும் அவர்களை விட்டு நீங்கவில்லை என்றுதான் தெரிகிறது.

மகம்மது அலி ஜின்னா தனிநாடு பிரிவினைக் கோரிக்கையை எழுப்பிய காலத்தில் அவரை வெள்ளையனின் கையாள் என்றும், நாட்டுப் பற்றில்லாதவர் என்றும் நயவஞ்சகக்காரர்கள் கூறி வந்தார்கள்! அவர் அலிகார் சர்வகலாசாலைக் கூட்டத்தில் "இந்துக்கள் தென்புறத்தையும் மேற்குபுறத்தையும் பாதுகாக்கட்டும், முஸ்லிம்கள் எல்லைப்புறத்தைபாதுகாக்கட்டும். அப்போது "இந்தியா இந்தியருக்கே" என்று ஒன்று பட்டு நாம் உலகிற்குக் கூறுவோம்!! என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும்போது அவருடைய உள்ளத்தில் உள்ள ஒற்றுமை உணர்ச்சி ஒளிவிட்டுப்பிரகாசிக்கிறது.

இந்திய விடுதலை பெற வேண்டும் என்பதில் அவருக்கிருக்கும் ஆர்வத்தை அவருடைய வார்த்தைகள் மெய்ப்பிக்கின்றன. அன்று மட்டுமென்ன; பாகிஸ்தான் அமைந்த உடன் அவர்கவர்னர்-ஜெனரலாகப்பதவியேற்றுக் கொண்டவுடன் அவரை பதவி மோகம் கொண்டவர் என்றும் ஏசினார்கள். அவர் அந்தப் பதவியைக் கொண்டுசுகபோகத்தை அனுபவிக்க எண்ணவில்லை. அப்படி அவர் விரும்பியிருப்பாரானால் அந்தப்பதவி வகித்துதான் பெற வேண்டும் என்ற சூழ் நிலையிலுமில்லை. எந்தப்பாகிஸ்தான் தனியரசுக்காக போராடினாரோ அந்த பாகிஸ்தான் கிடைத்தவுடன் ஒய்வெடுத்துக் கொள்ளாமல் அந்த நாட்டிற்கு தலைமைவகித்து அதை ஒப்பற்ற நாடாக்க ஓயாமல், உறங்காமல் உழைத்தார். அந்த ஓயாத உழைப்பு அவர் உயிரை சூறையாடி விட்டது. பாகிஸ்தானின் சிருஷ்டிகர்த்தா—அதன் தந்தைகாயிதே ஆஜாம் முகம்மது அலி ஜின்னா கடைசிவரை தன் இனத்திற்காகவும்—நாட்டிற்காகவும் உழைத்துக் கொண்டே உயிர்துறந்தார்.

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் ஜின்னா இறந்து விட்டார். புதிய கவர்னர்-ஜெனரலும் பாகிஸ்தான் சர்க்காருக்கு கிடைத்து விட்டார். ஆனால், பாகிஸ்தான் மக்கள் தங்கள் தந்தையை இழந்து தவிக்கின்றனர். திராவிடநாட்டு முஸ்லிம்களும் துயரக்கடலில் மூழ்கிக்கிடக்கின்றனர். நாமும் அவர்களுடைய துக்கத்தில் பங்கு கொள்கிறோம். பாகிஸ்தான் மக்கள் இனி புதியதொரு தந்தையைப்பெறமுடியாது. பாகிஸ்தானியர்கள் தங்கள் தந்தைக்கு செய்யவேண்டிய கடமை, அவர் நிர்மாணித்திருக்கும் பாகிஸ்தான் நீண்டு நிலவ தங்களின் ஒத்துழைப்பை நல்குவதில்தான் இருக்கிறது. இந்த நீக்கமுடியாத கடமையை உணர்ந்து பாகிஸ்தான் மக்கள் செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கையினால் நாம் துக்கத்தைத் துடைத்துக்கொள்கிறோம். அவர்களுக்கும் ஆறுதல் கூறுகிறோம். வாழ்க பாகிஸ்தான்!

"புத்ததாசன்"

# ஏழைகளைச் சாக்கிட்டு இப்படியும் கொள்ளை அடிக்கலாமா?

★

காட்டுப்புத்தூர், 18—9—48.

ஷை ஹாஸ்டல் மூன்று வருடங்களாக நடந்து வந்து, கடந்த ஆண்டில் காருண்ய காங்கரஸ் சர்க்காரால் மாணவர்களுக்காக 3300-ரூ கிராண்டு சாங்ஷன் செய்யப்பட்டது. முதல். வருடம் ஆறு மாணவர்களையும், இரண்டாம் வருடம் மூன்று மாணவர்களையும் வைத்து, இருபத்து இரண்டென சர்க்காருக்கு பொய்க்கணக்குக் காட்டி, ஷை தொகையை மானேஜர் பெற்று வந்தார். இதோடன்றி ஒவ்வொரு மாணவரிடமும் மாதம் அய்ந்து ரூபாயும் வசூலிக்கப்பட்டது. இவையாவும் மானேஜர் என்ற பொறுப்போடு திருவாளர் கே. பி. காத்தமுத்து என்பவர் பொறுப்பில் நடந்து வருகிறது. ஷை ஹாஸ்டலுக்கு ஒரு கமிட்டியிருந்தும், மானேஜரே எதேச்சையாக ஹாஸ்டலின் வரவுசெலவுகளை நடத்துகிறார். மாணவர் தேர்தலை-மானேஜர் தானே எதேச்சையாகத் தேர்ந்தெடுத்ததை கனம் லேபர் ஆபீசர் அவர்களின் விசிட்டின் போது கண்டித்தும் இருக்கிறார். மாணவர்கள் தங்கள் குறைகளை மானேஜரிடம் முறையிட்டும் யாதொரு பயனும் அடையவில்லை. ஹாஸ்டலுக்கு வாங்கும் பொருள்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கும் உறவினர்களின் உபயோகத்திற்குமே. இன்றுவரை உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஹாஸ்டல் வரவு செலவுக்கணக்கில் வாங்காத பொருள்களை வாங்கினதாகவும், வாங்கின பொருள்களின் தொகையை அதிகப் படுத்தியும் பொய்க்கணக்காக எழுதி மாணவர்களிடம் பொய்க்கையெழுத்து வாங்கி சர்க்காருக்குக் காட்ட வைத்திருக்கிறார். இது யார் வீட்டுச் சொத்து! யாருக்காக வாங்கி யார் உபயோகிப்பது!! தாங்க முடியாத அக்கிரமம்!!!

லேபர் ஆபீசர் வந்தபோது ஹாஸ்டல் சட்டதிட்டங்களை சொன்னதின் பேரில் ஷை கமிட்டி மெம்பரான திரு ஆர். ஒ. குப்பமுத்து அவர்களை மாணவர்கள், மானேஜர், சம்மதத்தின் பேரில் லேபர் ஆபீசர் முன்னிலையிலேயே வார்டனாக நியமிக்கப்பட்டது. மாணவர்களின் குறைகளை எழுத்து மூலமாக வார்டன் அவர்களிடம் அறிவிக்க அவர் சார்ஜ் வாங்கிய பின் ஆவன செய்கிறேன் என்று கூறி மானேஜரிடம் அக்கடிதத்தைக் காட்டி சார்ஜையும் கேட்க, அன்று மானேஜர் ஹாஸ்டலில் வந்து, "கேப்பைக் கழி தின்கிற பயல்களுக்கு ஒசு நெல்லஞ்சோறு தின்கிற கொழுப்பா?" என்ற கர்ஜனையுடன் மிரட்டினார். எதும் அறியாத மாணவர்கள் என்ன செய்வார்கள்? பாவம். தான் கொள்ளையடிக்கும் பணம் போய்விடும் என்று நினைத்து வார்டனிடம் சார்ஜ்ஜையும் கொடுக்க மறுக்கிறார். ஹாஸ்டல் குறைபாடுகளை முன்னணியாக நின்று கேட்கும் அருணாசலம் என்ற மாணவரின் மீது கெட்ட அபிப்பிராயங் கொண்டு, அவரை ஹாஸ்டலை விட்டு நிறுத்தி விடவேண்டும் என்ற எதேச்சாதிகாரத்துடன் கோவிந்தன், பூவலிங்கம் என்ற மாணவர்களிடத்தில்

நடு இரவில் பலாத்காரமாக கற்பனை கள் அடங்கிய தாளில் கையொப்பம் வாங்கி, 30. 8. 48ந் தேதி காலையில் அருணாசலம் என்ற பையனை நீக்கி ஏனையோர் சாப்பிடலாம் என்று உத்தரவிட, நான்காம்பார மாணவர் கோவிந்தன், "அவரை நிறுத்தக் குற்றம் இல்லையே" என்று பணிவுடன் கேட்க, அதற்கு அவர் "நீ அவனுக்கு சப்போட்டா? நீங்கள் எல்லாம்சேர்ந்து கொண்டு என்னை என்ன பண்ணி விடுவீர்கள்" என்று கோவிந்தன் என்ற மாணவரை அடித்து விட்டார். பின் ஹாஸ்டலில் ஒரே கூட்டம் எற்பட மானேஜர், மூன்று பையன்களை மட்டும் கையில் பிடித்துக்கொண்டு "நீங்கள் மட்டும் சாப்பிடுங்கள்" என்று சொன்னார். மாணவர்களில் சிலர் பயங்கர வற்புறுத்தலினால் சாப்பிட்டும் பள்ளி செல்ல வில்லை தங்களின் ஓயாத்துயரினால். இந்நிகழ்ச்சி உயர் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியருக்கு அறிவிக்கப்பட்டது. வார்டன் அவர்களால் லேபர் ஆபிஸருக்கும் தந்தி கொடுக்கப்பட்டது. பின்னர் தலைமை ஆசிரியர் அவர்களின் கட்டளைப்படி அருணாசலத்தையும் சேர்த்து மாணவர்களுக்கு உணவளிக்க, பள்ளிசென்று வருகின்றனர் இப்போது. பிற பின்னர் அறிவிக்கின்றோம்.

ஹாஸ்டல் மாணவர்கள்.

---

[5ம்பக்கத் தொடர்ச்சி]

வெளியேறினர்.

**சிவகங்கையில்.**

அரசர் உயர் நிலைப்பள்ளி முன்பு 3வழக்கறிஞர்கள்உள்பட 9 தொண்டர்கள் மறியல். மாணவர்கள் இந்தி ஏடுகளை நெருப்பிலிட்டனர். உள்ளூர்க் காங்கரஸ் தலைவரின் மகன் "தமிழ் வகுப்புக்குச்செல்லாதே! இந்திவாழ்க" என்றார். ஒரு பார்ப்பன மாணவர் இந்தி வகுப்புக்குச் செல்ல மறுத்துத் தொண்டர்களோடுகூட இருந்தார்.

இவ்வூர்க் கல்லூரியில் இந்தி எதிர்ப்பின் அறிகுறியாக ஒருவரும் கல்லூரி செல்லவில்லை.

**சேலத்தில்.**

செவ்வாய்ப்பேட்டை முனிசிபல் டவுன்ஸ்கூல், முனிசிபல் உயர்நிலைப் பள்ளி, லண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளி, இந்து மஹாஜன உயர் நிலைப் பள்ளி, விட்டில்பிளவர் உயர்நிலைப் பள்ளி, சர்க்கார் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஆகிய ஆறுபள்ளிக்கூடங்களின் முன்புஆண்களும் பெண்களுமாகிய109 தொண்டர்கள் மறியல்செய்தனர். ஏடுகளை நெருப்பிலிட்டனர் சில மாணவர்.

**திருச்சியில்.**

பொன்னையா ஹைஸ்கூல், பிஷப் ஹீபர் ஹைஸ்கூல், நேஷனல் காலேஜ் ஹைஸ்கூல் ஆகிய மூன்றுபள்ளிகளின் முன்பு 30 தொண்டர்கள் மறியல். பல மாணவர்கள் "இந்திபடியோம்" என உறுதிகூறிஏடுகளையும்கொளுத்தினர்.

**விழுப்புரத்தில்.**

முனிசிபல் உயர்நிலைப்பள்ளிமுன்பு வெற்றிகரமான மறியல். பல மாணவர்கள் இந்தி புத்தகங்களைக் கொளுத்தினர். கருப்புக்கொடி பிடித்து இந்தி ஒழிக என்று கூறிய ஒரு மாணவர் தண்டிக்கப்பட்டார்.

**துறையூரில்**

ஜெமீந்தார் உயர்நிலைப்பள்ளி முன்பு 10-தொண்டர்கள் மறியல். மாணவர்களிடையே பெருத்த ஆர்வம்.

**உத்திரமேரூரில்**

உயர் நிலைப்பள்ளி முன்பு 20-தொண்டர்கள் மறியல். எதிர்ப்பு வாக்கியங்களை மாணவர்களே கையினால் எழுதி நூற்றுக் கணக்கில் மக்களுக்கு வழங்கினர்.

**பட்டுக்கோட்டையில்**

உயர்நிலைப்பள்ளி முன்பு மூன்று பிரிவில் 34-தொண்டர்கள் மறியல் செய்தனர். இந்திப் புத்தகங்களை மாணவர்கள் தீக்கிரையாக்கினர். 500-க்கு மேற்பட்ட மாணவர்கள் பள்ளி செல்லவில்லை. மாணவர்களே தனியாக ஒரு ஊர்வலமும் நடத்தி இந்தி எதிர்ப்பைக் காட்டிக்கொண்டனர்.

**திருவத்திபுரத்தில்**

போர்டு உயர்நிலைப்பள்ளி முன்பு 15-தொண்டர்கள் மறியல். போலீசார் தடுத்தும் மாணவர்கள் ஏடுகளைக் கொளுத்தினர். 100-க்கு மேற்பட்ட மாணவர்கள் இந்தி வகுப்புக்குச் செல்லோம் என உறுதி கூறினர்.

**திருவையாற்றில்.**

சீனிவாசராவ் உயர்நிலைப்பள்ளி முன்பு 22 தொண்டர்கள் மறியல்.

**திண்டிவனத்தில்.**

உயர்நிலைப்பள்ளி முன்பு 4 தொண்டர்கள் மறியல்.

**புதுக்கோட்டையில்.**

பிரகதம்பாள் கிளைப்பள்ளியின் முன்பு 10 தொண்டர்கள் மறியல். மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஒலிகளை, அணி அணியாக வந்து ஒலித்துச் சென்றனர்.

**தடவாசலில்**

பள்ளிமுன்பு 12 தொண்டர்கள் மறியல். 350 மாணவர்கள் தலைமையாசிரியர் மிரட்டியும் அன்று பள்ளி செல்லவில்லை.

**பாபநாசத்தில்**

உயர்நிலைப்பள்ளி முன்பு 5 தொண்டர்கள் மறியல். பள்ளிக்குச் சம்பளங் கட்டிய மாணவர்கள் நோட்டுகளில் 'இந்தி ஒழிக' என்று எழுதினார்கள்.

**ஆம்பூரில்**

உயர்நிலைப்பள்ளி முன்பு 8 தொண்டர்கள் மறியல்.

**திருக்காட்டுப்பள்ளியில்**

பி. எஸ். அய்யர் உயர்நிலைப்பள்ளி முன்பு 7 தொண்டர்கள் மறியல்.

**அரக்கோணத்தில்**

சி. எஸ். எம். உயர்நிலைப்பள்ளி முன்பு 11 தொண்டர்கள் மறியல். மாணவர்கள் பெருவாரியாகக் கையெழுத்திட்டும், வாயினால்கூறியும் இந்தி படியோம்' என்றனர்.

**லால்குடியில்**

உயர்நிலைப்பள்ளி முன்பு தொண்டர்களின் மறியல்.

**வில்லிவாக்கத்தில்**

சிங்காரம் பிள்ளை செகண்டரிப் பள்ளிமுன்பு 5 தொண்டர்கள் மறியல்.

**சீர்காழியில்**

சபா நாயக முதலியார் இந்து உயர் நிலைப்பள்ளி முன்பு 9 தொண்டர்கள் மறியல்.

**திருத்துறைப்பூண்டியில்**

போர்டு உயர்நிலைப்பள்ளி முன்பு இரண்டு பிரிவாகத் தொண்டர்கள் மறியல் செய்தனர். தலைமை ஆசிரியர் முன்னிலையிலேயே பல மாணவர்கள் இந்தி ஏடுகளைக்கொளுத்தினர்.

**திருப்பத்தூரில்**

உயர்நிலைப்பள்ளிமுன்பு 11 தொண்டர்கள் மறியல். மறியல் முடிந்த பின் 144.

**செங்கத்தில்**

உயர்நிலைப்பள்ளி முன்பு மறியல் செய்ய 21 தொண்டர்கள் புறப்பட வழியிலேயே 144.

**கோவில்பட்டியில்**

போர்டு உயர்நிலைப்பள்ளி முன்பு இரண்டு பிரிவினராகச் சென்று 10 தொண்டர்கள் மறியல் செய்தனர். பார்ப்பனத் தலைமையாசிரியரே மறியலின் அமைதியைப்பாராட்டினார். 144 எற்கனவே இருந்து வருகிறது.

**சீரங்கத்தில்**

உயர்நிலைப்பள்ளி முன்பு 8 தொண்டர்கள் மறியல். பார்ப்பன மாணவர்களும் உற்சாகத்தோடு இந்தி எதிர்ப்பு ஒலிகளை எழுப்பி இந்தி படியோம் என்றனர்.

**செங்கற்பட்டில்**

கொலம்பாஸ் உயர்நிலைப்பள்ளி, செயின்ட் மேரி உயர்நிலைப்பள்ளி, செயின்ட் ஜோசப் உயர்நிலைப்பள்ளி, ராமகிருஷ்ணா உயர்நிலைப்பள்ளி ஆகிய 4 பள்ளிகளின் முன்பு 104 தொண்டர்கள் மறியல் செய்தனர்.

**கோபியில்**

உயர்நிலைப்பள்ளி முன்பு இரண்டு பிரிவில் பல தொண்டர்கள் மறியல் செய்தனர். மாணவர்கள் இந்திப் புத்தகங்களைக் கொண்டு ஒரு அக்கினிக் குண்டமே ஆக்கி விட்டனர்.

**காஞ்சீபுரத்தில்**

பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, ஆண்டர்சன்உயர்நிலைப்பள்ளி, முனிசிபல் செகண்டரிப்பள்ளிகளின் முன்பு 40 தொண்டர்களின் மறியல்.

**கடலூரில்**

எஸ். பி. ஜி. உயர்நிலைப்பள்ளி முன்பு 11

நாமக்கல்லில்

போர்டு உயர்நிலைப்பள்ளி முன்பு 8 தொண்டர்களின் மறியல். மாணவர்கள் ஏடுகளை நெருப்பிலிட்டனர்.

திருச்செங்கோட்டில்

போர்டு உயர்நிலைப்பள்ளி முன்பு இரண்டு பிரிவினராக 18 தொண்டர்கள் மறியல் செய்தனர்.

திண்டுக்கல்லில்

முனிசிபல் உயர்நிலைப்பள்ளி முன்பும் பரிசுத்த மரியாயி உயர்நிலைப் பள்ளிமுன்பும் 18 தொண்டர்களின் மறியல். மாணவர்கள் ஏடுகளைத் தீக்கிரையாக்கினர்.

சிதம்பரத்தில்

பச்சையப்பன் பள்ளி முன்பும் நகர உயர்நிலைப்பள்ளி முன்பும் 8 தொண்டர்களின் மறியல். பச்சையப்பன் பள்ளியில் எட்டுக்கு தீயிட்டமாணவரும், கிழித்தெறிந்தமாணவரும் போலீஸாரால் பிடிக்கப்பட்டனர். நகர உயர்நிலைப்பள்ளியில் 50 மாணவர்கள் முன்வந்து மாலையிட்டனர். மாணவர்களில் 100 க்கு 90 பேர் இந்தியை எதிர்க்க, பிற்பகல் பள்ளிக்கூடத்தையே மூடவேண்டியதாயிற்று.

பண்ணுருட்டியில்

போர்டு உயர்நிலைப்பள்ளியின் முன்பு ஒரு புலவர் உள்பட 5 தொண்டர்களின் மறியல். காங்கரஸ் தோழரின் உபசாரம். பல மாணவர்கள் "இந்தி படியோம் என்ன ஆனாலும் ஆகட்டும்" என இந்தி முனஷிசாஸ்திரியாரிடமே கூறினர்.

கரூரில்

முனிசிபல் உயர்நிலைப்பள்ளி முன்பு 8 தொண்டர்கள் மறியல். மாணவர்களின் இந்தி எட்டால் தயாரிக்கப்பட்ட அக்கினி குண்டம்! காங்கரஸ் கருங்காலிகளுக்கு மாணவர்களின் கரிப்பூச்சு!

கூத்தாநல்லூரில்

போர்டு உயர்நிலைப்பள்ளிமுன்பு 10 தொண்டர்கள் மறியல். இத்தொண்டர்களில் ஒருவரான தோழர் வே. க. பழனிவேலு அன்றிரவே மார்நோயால் இயற்கை எய்தினார்.

திருவிடமருதூரில்

ஆதீனம் உயர்நிலைப்பள்ளி முன்பு 11 தொண்டர்களின் மறியல். பார்ப்பனக் கொசுக்களால் தலைமையாசிரியர் ஒத்துழைப்போடு அமைக்கப்பட்ட இந்தி ஆதரிப்புக் கும்பலின் பெருந்தோல்வி. காங்கரஸ் திராவிடர்களின் இந்தி எதிர்ப்பு செயல் குறிப்பிடவேண்டியது.

இடப்பாடியில்

உயர்நிலைப்பள்ளிமுன்பு 10 தொண்டர்களின் மறியல்.

ராஜாமடத்தில்

போர்டு உயர்நிலைப்பள்ளி முன்பு 7 தொண்டர்கள் மறியல் செய்ய எத்தனித்தபோதே சூப்பரின்டெண்ட் மறைவினால் எதிர்பாராதபடி பள்ளி மூடப்பட்டு விட்டது.

ஆர்க்காட்டில்

உயர்நிலைப்பள்ளி முன்பு 5 தொண்டர்கள் மறியல் செய்தனர்.

வாலாஜாபேட்டையில்

உயர்நிலைப்பள்ளி முன்பு 2 தொண்டர்கள் மறியல் செய்தனர்.

வேலூரில்

ஊரிஸ் கல்லூரி முன்பும் மகந் உயர் நிலைப்பள்ளி முன்பும் 11 தொண்டர்களின் மறியல். மாணவர்கள் ஏடுகளைத் தீக்கிரையாக்கினர்.

கள்ளக்குறிச்சியில்

போர்டு உயர் நிலைப்பள்ளி முன்பு பெண்தொண்டர்கள் நால்வரும் புலவர் ஒருவரும் உட்பட 33 தொண்டர்கள் மறியல் செய்தனர். பார்ப்பனத்தலைமையாசிரியர் மாணவர்களைப் பயமுறுத்தியது வெற்றிதர வில்லை.

கண்ணமங்கலத்தில்

மிடில் ஸ்கூலின் முன்பு 12 தொண்டர்களின் மறியல்.

காட்டுப்புத்தூரில்

இவ்வூர்ப் பள்ளியின் முன்பு பல தொண்டர்களின்மறியல்.

தஞ்சையில்

தூய பேதுரு உயர் நிலைப் பள்ளி, கலியாண சுந்தரம் உயர் நிலைப்பள்ளி, வீரராகவ உயர் நிலைப்பள்ளி, தூய அந்தோணியார் உயர் நிலைப்பள்ளி, கரந்தை தமிழ்ச்சங்கம் ஆகிய 5 பள்ளிகளின் முன்பு 55 தொண்டர்கள் மறியல் செய்தனர். மாணவர்கள் ஏடுகளைக்கொளுத்தி, இந்திபடியோம் எனப்பெருவாரியாக உறுதி கூறினர்.

மன்னார்குடியில்

தேசிய உயர்நிலைப்பள்ளி முன்பு 11 தொண்டர்களின் மறியல். மாணவர்களின் பெருத்த ஆதரவு.

அய்யம்பேட்டையில்

போர்டு உயர்நிலைப்பள்ளி முன்பு 12 தொண்டர்கள் மறியல். மாணவத் தோழர்களின் பேராதரவு.

ஆரணியில்

கோட்டை உயர்நிலைப்பள்ளிமுன்பு இரண்டு பிரிவினராகத் தொண்டர்களின் மறியல்.

இராசிபு:த்தில்

உயர்நிலைப்பள்ளியின் மூன்று வாயில்களிலும் 38 தொண்டர்களின் மறியல். நூற்றுக்கணக்கான மாணவர்கள் பள்ளியினின்றும் வெளியேறினர்.

திருப்பனந்தாளில்

சாமிநாதசாமி செந்தமிழ்க் கல்லூரி முன்பு 12 தொண்டர்களின் மறியல்.

ஜெயங்கொண்டத்தில்

உயர்நிலைப்பள்ளிமுன்பு 24 தொண்டர்களின் மறியல்.

ஆத்தூரில்

உயர்நிலைப்பள்ளிமுன்பு 24 தொண்டர்கள் மறியல். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் இம்மறியலில் தொண்டர்களாக கின்றார்கள்.

அரியலூரில்

உயர்நிலைப்பள்ளி முன்பு 8 தொண்டர்களின் மறியல். மாணவர் பலர் இந்தி வகுப்புக்குச் செல்லவில்லை.

குளித்தலையில்

உயர்நிலைப்பள்ளி முன்பு 21 தொண்டர்களின் மறியல்.

பெரியகுளத்தில்

உயர்நிலைப்பள்ளி முன்பு 8 தொண்டர்களின் மறியல். சுமார் 300 மாணவர்கள் தொண்டர்களுக்கு மாலையணிந்து, ஏட்டுக்கு நெருப்பிட்டுப் பள்ளியினுள் சென்றார்கள்.

விருதாசலத்தில்

போர்டு உயர்நிலைப்பள்ளி முன்பு 7 தொண்டர்கள் மறியல் செய்தனர்.

## திருமணம்

15—9—48 காலை 10 மணிக்கு புதுப்பாளையம், பி. ஆர். குப்புசாமி மகள் தோழியர் ரஷ்யாவுக்கும் தோழர் எஸ்- நாராயணசாமிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்பாக நடந்தது. இவ்வூரில் பார்ப்பனப் புரோகிதமின்றி நடைபெற்றமுதல் திருமணம் இது ஒன்றே ஆகும். இத்திருமணத்தால் இவ்வூர் மக்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

## அம்பேத்கார் ஆதிதிராவிடர் கழகம்

17-9-48மாலை 6மணிக்கு திருமழபாடி 'அம்பேத்கார் திராவிட கழகத்தின்' சார்பில், ஆதிதிராவிடர் தெருவில் 'பெரியார் பிறந்த தினம்' என் கொண்டாடவேண்டும்?' என்பதுபற்றி 'முகிலன்' அவர்கள் பேச கூட்டம் 7 மணிக்கு இனிது முடிந்தது. தொடர்ந்து கொடியேற்றமும் நடைபெற்றது.

★

இந்திமொழி தலை சிறந்த அறிஞர்களைப் பெற்றெடுக்கவில்லை என்று திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டார். இந்தி உற்பத்தி செய்த அறிவாளிகள் யார் என்றால் நோகாமல் பதவிக்கு வந்த நேருவையும்அவரது அய்யாவையுந் தான் குறிப்பிடவேண்டும். அவர்களது தியாகம் இன்று அந்தக் கூட்டம் குடும்பத்தோடு கொள்ளை அடிப்பது (உங்களுக்குத் தெரிந்தது)தான். வேறு ஆட்களைக் குறிப்பிட முடியாது.

பெரியார்.

கல்வித் திட்டத்திலும் தாய் நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் உதவியிலும் இந்தக் கல்வி மந்திரி கண்கட்டு வித்தைத் திருவிளையாடல்கள் நடத்த வியலாதென்று இந்தக் கல்வி மந்திரிக்கு நெட்டுக்கு நேரான வாசகத்திலே நாம் தெரிவித்தாக வேண்டும்.

Dr. கிருட்டினசாமி

[4ம் பக்கத் தொடர்ச்சி]

எனக்கு உயிரளித்து, இதுவரை நிம்மதியுடன் வாழச்செய்த, எனது ஆருயிர் நண்பன் மாசிலாமணியை, என்மீது உனக்கன்புஇருக்குமானால், என்மேல் ஆணையிட்டு, அவனை மறுமணம் புரிந்துகொண்டு உனது வாழ்க்கைப் பாதையை வகுத்துக்கொள். நான் இனி அங்குவருவதற்கில்லை, என் முடிவு இந்த நாட்டில்தான். தீர ஆலோசித்துச்செய். நீ வாசிக்கும் எனது முடிவும் அப்படித்தான். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற நம் வள்ளுவப் பெருந்தகை வாய்மொழிக்கிணங்கியதே. அப்போதுதான் எனது மனம் நிம்மதியடையும். அதுதான் விவேகமறிந்த வீரன் மனைவிக்கழகு! என்று எழுதியிருந்தது. வாசகம் பூராவும் படித்தவுடன், முற்றிலும் எதிர்பாராத மாசிலாமணிக்கு மயிர்க்கூச் செறிந்தது. நண்பன் ஆசிகூற தாயகம் திரும்பி, லிகிதத்தை உரியவளிடம் சேர்ப்பித்தான். லிகிதத்தின் வாசகம், இந்திராணிக்கு ஒரு புறம் வாட்டமும், பிறிதொருபுறம் மகிழ்ச்சியுமூட்டியது. வாழ்க்கைத் துணைவனின் மனக்கருணையை எண்ணினாள், ஏங்கினாள், அழுதாள். தன்னைப் பிரிந்தாலும் தன் எதிர்கால வாழ்வுக்கும் வாழ்க்கைத் துணைவனே யாகி விட்டார் என்று அவள் வாய் கூறியது. வாழ்க்கைத் துணைவனின் வாய்மொழிப்படியே என் வாழ்க்கையை நடத்துவதே எல்லா வழியிலும் இன்பம்எனத் துணிந்தாள். விவேகமறிவதே வீரன் மனைவிக்கழகு என, அவள் நாதன் எழுதியிருந்தசொல், அவளை அறியாமலே அவள் வாயிலிருந்து முத்துக்கள் போல் உதிர்ந்தன. அதன்மேல் அதுதான் சரியென, ஆனந்தக் கண்ணீர், அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக்கள் விழுந்து சட்டென தெரித்தன. மகிழ்ச்சியும், வாட்டமும் அவளது மனதில் போராடின. முடிவில் மகிழ்ச்சியே வென்றது. பெற்றோரிடம் விவாதித்து, அவர்கள் ஆசிகூற, லட்சியவாதியாம் இளங்கோ தலைமையில் மாசிலாமணி—இந்திராணி (இருவர்க்கும்) மறுமண ஒப்பந்தம் (அவரவர்கள் அணிந்திருந்த கணையாழிபரிமாறுதலோடு) ரூ 5¼ செலவில் நடைபெற்றது. இவர்களைப் பிணைத்த, விவேக வீரனுக்கு கம்பியில்லாத்தந்திமூலம் செய்திபறந்தது. வாழ்க்கை ஒப்பந்தம் முடிந்த உடன், அங்கு குழுமியிருந்த எல்லோர் முன்னிலையிலும் தான், உலகமறியாத குழந்தை அங்கயற்கண்ணி கேட்ட கேள்வி, தலைப்பில் உள்ளது.

நண்பன் பிரிவால் நலிவுற்று, சாவோடு போராடிக் கொண்டிருந்த ஏகாம்பரத்திற்குச் செய்திஎட்ட, கேட்டதும் உவகையுற்று, பூரித்து வாயார வாழ்த்தும்போதுதான் ஆவி பிரிந்தது.

# திராவிட முஸ்லிம்களே!

★

திராவிட நாட்டைச் சேர்ந்த முஸ்லிம்கள் அனைவரும் கட்டுப்பாடாக, ஒற்றுமையாக திராவிட நாட்டுப் பிரிவினைக்கு போராட வேண்டும். திராவிட நாட்டைத் தனி நாடாகக் காண்பது நமது பிறப்புரிமை. நாம் திராவிட மக்கள். திராவிடநாடே நம்நாடு. நம் தாய்மொழி தமிழ். தமிழராகிய நாம் அனைவரும் நம் நாட்டைத் தனி நாடாக்கும் திருப்பணியில் ஒன்றுபடவேண்டும்.

நம்முன்சிலர் தலைவர்களென்று கூறிக்கொள்வோரும், பிறரும் சுயநலங்களை மனதில் கொண்டோ, பதவியாசை கொண்டோ காங்கரசில் சேர ஆசைப்படலாம். பதவி ருசி அல்லது வேறு சுயஇலாப ருசி அவர்களை அத்துறையில் இழுக்கலாம். அந்த உட்கருத்தை மறைக்க வேறு போலிக் காரணங்களைக் கூறி திராவிட முஸ்லிம்களுக்கு திராவிட கட்சி மீது வெறுப் பேற்படச் செய்து தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளமுயலலாம். முஸ்லிம்களால்தான் திராவிடக் கட்சி நிலைத்திருக்கிறதென்னும் எண்ணத்தைப பரப்பி, அதை வீம்புப் பேச்சாக நாங்களில்லா விட்டால் உங்கள் கட்சி நிலைக்காதப்பா என்று பொறுப்பில்லாத் தனமாக ஆங்காங்கே பேசச் செய்யலாம். எங்களுக்கு இப்போதே ஒப்பந்தங்கள் செய்து கொடுத்துவிட வேண்டும், அப்பொழுதுதான்நாங்கள் ஆயிரக்கணக்கில் சேருவோமென்று இதுவரையில் எந்தத் தியாகமும் செய்யாதவர்கள்—கட்சித் தொண்டாற்றாமல், சர்க்கார் உத்தியோகமே தன் கட்சி எனக் கிடந்து அரசியலில் சம்பந்தமே வைத்துக்கொள்ளாத, பின்பற்றுவோரில்லாத சர்க்கார் குலாம்கள் சிலர்—இப்போதும் அப்பதவியிலிருந்து கொண்டே தம் முதலாளிகளைத் திருப்தி செய்விக்கும் உட்கருத்துடன் திராவிடர் கட்சியில் முஸ்லிம்களைச் சேரவொட்டாமல் செய்வதற்கு என்னென்ன நொண்டிக் காரணங்களைக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்க முடியுமோ அவைகளைக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வண்ணம் இன்னும் பல பிரகிருதிகள் சமயம் நேரும் போது காங்கரசில் சேருவதும், எட்டி உதைக்கும் காலை முத்தமிட்டுக் கொண்டிருப்பதும், தங்கள் சுயநலம் ஒன்றைத் தவிர வேறெதையும் கருதாதிருப்பதுமாக வேலை செய்து வருகின்றனர். தேர்தலின் போது தேர்தலில் வென்ற முஸ்லிம்கள் சிலர், சில ஊர்களில் காங்கரஸ்காரர்களுடன் வலியப் பேரம் பேசினர். ஆனால் சிலவிடங்களில் வலியவந்த முஸ்லிம்களைக்கூட காங்கரஸ்காரர்கள் உதாசீனம் செய்து நிராகரித்து விட்டனர். தேர்தலில் வெற்றிபெறக் காரணமாயிருந்தது திராவிடர்களாயிருந்தும், வெற்றி பெற்ற பிறகு காங்கரஸ்காரர்கள் தயவைச் சம்பாதிக்கச் சில முஸ்லிம்கள் வலிய முயன்றும், அலட்சியப்படுத்தப்பட்டதைத்தான் பலனாகக்காண முடிந்தது, அந்தமுஸ்லிம்கள்.

திராவிட முஸ்லிம்கள் இத்தகைய கொடிய முதலைகளிடமிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்நாட்டில் முஸ்லிம்கள் காங்கரஸ் கட்சியை விரும்ப முடியாது என்பதற்கு, அக்கட்சியினர் ஆதியிலிருந்தே முஸ்லிம்களிடம் எவ்வளவு துவேஷத்துடன் நடந்து வந்திருக்கின்றனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும் விஷயமாகும். இன்று காங்கரஸ்காரர்கள் சில முஸ்லிம்களைத் தங்கள் கையாட்களாக்கிக்கொள்ள முயலுகிறார்கள். அவர்களைப் பலவித ஆசைகளைக் காட்டி, அவர்கள் காட்டும் ஆசைகளில்மயங்குபவர்களும், தங்கள் மேல் உத்தியோகஸ்தர்களிடம் நல்ல பிள்ளைகளாக வேண்டும் என நினைப்பவர்களும், பார்ப்பனர்கள் தயவில் தொழில் நடத்த வேண்டியிருப்பவர்களும், காங்கரசில் முஸ்லிம்களைச் சேர்க்கும் வேலையைப் பகிரங்கமாகச் செய்ய முன்வராமல், திராவிடக் கட்சியில் குறைகளைக் கூறித் திரிந்துகொண்டு, பொய்ப் பிரசா

ரத்தைச் சிறுகச் சிறுக அவிழ்த்து விட்டு முஸ்லிம்களுக்கு திராவிடக் கட்சியின் மீது வெறுப்பேற்படுமாறு செய்துவருகின்றனர். இது உதைத்தகாலை முத்தமிடுவதாகும் என்பதோடு, வெட்ட வருபவனிடம் கழுத்தை நீட்டுவதுமாகும்.

தினந்தோறும் காங்கரஸ் ஏடுகளும், மேலிடத்துக் காங்கரஸ் தலைவர்களும், திராவிட முஸ்லிம்களை எந்த வகையில் மதித்தும் எழுதியும், நடத்தியும் வருகின்றனர் என்பதைத் தினசரி, சுதேசமித்திரன், தினமணி போன்ற தேசியப் பத்திரிகைகளைப் படித்துப் பார்த்தால் தெரியும். முஸ்லிம்களுக்கு, அவர்கள் எவ்வளவுதான் அடிபணிந்து போனாலும், காங்கரஸ் நன்மை செய்யவே செய்யாது என்பது வெளிப்படை.

திராவிடக் கட்சியினர் துவக்கத்திலிருந்தே முஸ்லிம்களோடு தோளோடு தோள் சேர்த்து நின்று தொண்டாற்றியவர்கள். முஸ்லிம் லீக் தென்னாட்டில் வேறான்றவும், பாகிஸ்தான் கிளர்ச்சி வலுக்கவும், தேசியவாதிகள் முஸ்லிம்களிடையே அதிகமாய்ப் பெருகாதிருக்கவும், ஆதிமுதல் இடையறாது நம்முடனேயிருந்து வருபவர்களும் திராவிட நாட்டினரேயாவார்கள். நாங்கள் இனத்தால்முஸ்லிம்களானாலும் நாமும் திராவிடர்களே. அவர்களும் திராவிடர்களே. இரு வகுப்பினருடைய மூல இனமும் திராவிட இனமே, மொழியாலும் நாமும் அவர்களும் ஒன்றே. பழக்க வழக்கங்களிலும் நமக்கும் அவர்களுக்கும் ஒருசில விஷயங்களைத் தவிர்த்து வேறு வித்தியாசங்கள் ஒன்றும் இல்லை.

ஆனால் காங்கரஸைத் தாங்கி நிற்கும், காங்கரஸாக நிற்கும் ஆரியர்களுக்கும் நமக்கும் சம்பந்தமே இல்லை. அந்தக் காங்கரஸைத் தழுவி நிற்கும் திராவிடர்களும் ஆரியர்களைப் போன்று நடிப்பவர்களாக இருப்பதால், அவர்களுக்கும் நமக்கும், நாம் எவ்வளவுதான் ஒட்டிக்கொள்ளப் பார்த்தாலும் சம்பந்தம் இருக்கவே முடியாது என்பது மறைவான விஷயமன்று.

ஆகவே திராவிடநாட்டுமுஸ்லிம்கள் அனைவரும் கட்டுப்பாடாக, திராவிட இயக்கத்தில் சேர்ந்து பங்குகொள்ளவேண்டும். தென்னாட்டில் இனிமேல் திராவிட முஸ்லிம்கள் தொண்டாற்ற வேண்டியது திராவிட இயக்கத்தில்தான். அரசியல் போராட்டத்திற்கு திராவிட இயக்கம் தான் நமது இயக்கம் என்று உறுதி கொள்ளுங்கள். திராவிட முஸ்லீம்களே! இதனை எவர் மறுத்துக் கூறினும், சுயநலவாதிகள் என்ன கூறினும் செவிசாய்க்காதீர்கள். பாகிஸ்தான் பெற நாம் எத்தகைய கட்டுப்பாட்டுடன் தொண்டாற்றினோமோ, அதே கட்டுப்பாட்டுடன் தான் திராவிட நாடுபெற உழைக்க வேண்டுமென்பதை மறக்கவேண்டாம். இப்பொழுதே உறுதிகொள்ளுங்கள், திராவிட கழகத்தில் சேருங்கள். திராவிட முஸ்லிம்கள் திராவிட இயக்கத்தில் பங்கு கொண்டு பணியாற்ற வேண்டியது திராவிட முஸ்லிம்களாகிய நமக்குச் சொந்தப் பொறுப்பாகும். திராவிட நாட்டு பிரிவினைக்குத் தொண்டாற்றுவோம். திராவிட நாட்டு பிரிவினைதான் திராவிட முஸ்லிம்களுக்கு நன்மை செய்யக்கூடியது. முஸ்லிம்கள் மானத்தோடும் உரிமைகளோடும் வாழவேண்டுமானால் திராவிட இயக்கத்தில் சேர்ந்து தீரவேண்டும். எனவே ஒன்றுபடுங்கள் திராவிட முஸ்லிம்களே என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். எம். பாஷா.

---

[3ம்பக்கத் தொடர்ச்சி]

ஆரியர்க்கு அடிமைப் படுத்தும் இயல்பினது; என்ற முடிவுக்கு வந்து விட்டிருப்பார். அத்தகைய முடிவுக்கு வந்துவிட்டிருந்தால் அவர், பெரியாருடன் சேர்ந்து தன்மான இயக்கக்கொள்கைகளைப் பரப்புவதிலே தன் காலத்தை, அறிவுத்திறனைப் பயன்படுத்தியிருப்பார். அதற்கேற்ற நூல்கள் அளவிரந்தனவற்றை ஆக்கியிருப்பார். பெரியாரின் புரட்சிக் கருத்துக்களும் நாட்டிலே பரவ இத்தனை ஆண்டுகள் ஆகி இருக்காது. அத்தகைய பெரும் நன்மையைத் தமிழர் இழந்தனர், மறைமலையடிகளார் சைவத்தினிடம் நம்பிக்கை வைத்துவிட்டதால்.

அங்ஙனமேதான் என் நண்பனும் அரனிடம் அசையாத நம்பிக்கை கொண்டவன். கோயிலிலே, குளங்களிலே, உருவ வணக்கத்திலே, மந்திரத்திலே, திருநீற்றிலே நம்பிக்கையுடையவன். ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்துவிட்டதால், அவன் படிக்கின்ற ஒவ்வொரு துறையிலேயும் ஆண்டவனைக் குறிக்கின்ற உண்மைகள் இருப்பதாகக் காட்டுவான். உதாரணமாக, காற்றிலே 1 பங்கு எரிவதற்கு ஆக்கமளிக்கும் உயிர்க்காலும், 4 பங்கு எரிவதைத் தடுக்கும் வெடிக்காலும் கலந்திருத்தல் கருணையங்கடலின் செயலென்பான். எப்படியென்று கேட்டால், மொத்தமும் உயிர்க்காலாகவே இருந்தால், எரிய ஆரம்பிக்கும் ஒவ்வொன்றும் எரிந்து கொண்டேயிருக்கும், அணைக்கவே இயலாது எரிகின்ற ஒவ்வொரு பொருளும் மிகுந்த ஒளியோடு வெகு விரைவில் எரிந்து போகும். கொள்ளிக்கட்டை போன்ற எரியாத நெருப்பு இருத்தலே முடியாது. ஒரு மணி நேரம் நிதானமாக எரியக்கூடிய கட்டை 5 நிமிடங்களில் திகுதிகுவென்று எரிந்து மறையும். விளக்குகளில் எண்ணை வெகு சீக்கிரத்தில் ஆகிவிடும். எங்காவது தீ விபத்து நேருமேல், நெருப்பணைக்கும் இயந்திரம் வருவதற்குள் எல்லாம் எரிந்து சாம்பலாகிவிடும்' என்று கூறுவான். அணுவினைப்பற்றிப் படிக்கும்போது, நீர்க்காலணுவில், நடுவிலே ஒரு புரோடானும் அதைவலம் வரும் ஒரு எலெக்ட்ரானும் இருக்கின்றனவென்றும், புரோட்டான் ஆண்பால் மின்சக்தியுடையதென்றும், எலெக்ட்ரான் பெண்பால் மின்சக்தியுடையதென்றும் அவன் படிக்கநேருமேல், 'அணுவிலே கூட சிவசக்தி ரூபம் இருக்கிறது பாரீர்' என்பான். 'எவ்வாறெனில் பெண்பால் மின்சக்தியுடைய எலெக்ட்ரான் ப்ரோடானைச்சுற்றி வலம் வருவதால் சலனத்தோடிருக்கிறது. ப்ரோடானோ இருந்த இடத்திலேயே இருக்கிறது. அங்ஙனமேதான் ஆண்பாலாகிய சிவன் ப்ரோடான் போன்று இருந்த இடத்திலேயே அதாவது சலனமற்று இருக்கிறது. பெண்பால் சக்தியுடைய எலெக்ட்ரான் போன்று பெண்பாலாகிய சக்தி அசைகிறாள். அவ்வசைவுதான் இவ்வண்டபிண்ட சராசரங்களின் தோற்றமென்று மேலும் விளக்கம் தருவான்.

இவ்வாறுதான் படிக்கின்ற ஒவ்வொன்றினையும், தன்னுடைய கடவுள் நம்பிக்கைக்கு ஏற்றவையென்று திரித்துக் கூற, அவன் தனது அறிவைச் செலவழித்தலால், உண்மையான அறிவு விளக்கம் பெற அவனால் இயலாமல் போய் விடுகின்றது. உதாரணமாக, 'நமக்காகத்தான் கடவுள் காற்றிலே ஒரு பங்கு உயிர்க்காலையும், மற்ற 4 பங்கு வெடிக்காலையும் கலந்திருக்கிறார்' என்பதற்குப் பதிலாக, 'வெயிற்பிரதேசங்களிலுள்ளோர் கறுத்தும், குளிர்ப் பிரதேசங்களிலுள்ளோர் வெளுத்துமிருப்பது போல், இருட்செறிந்த இடங்களிலேவாழ்வதால்கண்ணிருந்தும் பார்க்கின்ற சக்தியுடைய பாகமட்டும் பழுதடைவது போல், எப்பொழுதும் ஏறுவதும் இறங்குவதுமாயிருத்தலால் மலை ஜாதியினரின் கால்களும், உடலும் மற்றவரின கால்களையும், உடலையும்விட பருத்தும், பெருத்தும், உரமுடனும் இருத்தல் போல, அதாவது சூழ் நிலைக்கேற்பத்தான் உடலமைப்பும், வாழ்க்கைமுறை

யும் அமையும் என்ற உண்மைக்கொப்ப, ஒரு பங்கு உயிர்க்காலும், 4 பங்கு வெடிக்காலும் கலந்துள்ள நம்மைச்சுற்றிலுமுள்ள காற்றிற்கேற்றவாறுதான் நம் வாழ்க்கை முறையும் அமைந்திருக்கிறதே யொழிய, கடவுளால் நமக்காகக்காற்று அவ்வாறு கலக்கப்பட்டில்லை' என்று கூறுவது உண்மையும், சரியானதும், அறிவுக்கேற்றதுமானதல்லவா? அங்ஙனமே சிவசக்திரூபந்தான் நீர்க்காலின் அணு என்ற முடிவுக்கு வந்து சும்மா இருப்பதைவிட, ப்ரோடான் எதனால் ஆக்கப்பட்டுள்ளது? எலெக்ட்ரான் எதனால் ஆக்கப்பட்டுள்ளது? இரண்டும் ஒரு வஸ்துவினாலேயே ஆக்கப்பட்டு நிறை வேறுபாட்டால் வேறுபட்டிருக்கின்றனவா? இரு வேறு வஸ்துக்களால்தான் ஆக்கப்பட்டுள்ளனவா? என்ற முறையில் சிந்திக்கத்தொடங்குதல் நல்லதல்லவா? மேலும் அணுக்கள் சிவசக்தி ரூபம் என்றால், அவை தாமாக ஒன்றும் செய்யவல்லனவாக இல்லையே? மனிதனால் கட்டி ஆளத்தானே படுகின்றன? நீர்க்காலணுவில்தான் எலெக்ட்ரான், ப்ரோடான்மட்டும் இருத்தலால் அதனைச் சிவசக்திரூபம் என்று கூறமுடிகிறது. மற்ற அணுக்களில் நியூட்ரான் பாஸிட்ரான் போன்ற இருவேறு வஸ்துக்கள் இருக்கின்றனவே, அதற்கென்ன தத்துவார்த்தம் கூறமுடியும்? இவற்றைப்பற்றியெல்லாம் அவன் சிந்திக்கமாட்டான். காரணம் சிந்தித்தால் அவனுடைய நம்பிக்கை சிதறும் ஒன்று, மற்றொன்று சிந்திப்பதற்கு நேரமேது? அறிகின்ற ஒவ்வொரு விஞ்ஞான உண்மையையும் ஆண்டவனின் அருள்திறத்திற்கோர் எடுத்துக்காட்டென எண்ணி, எல்லையில் பரம்பொருளை நினைந்து, நினைந்து உருகுவதிலேயே தன்காலத்தைச் செலவழிக்கிறான். பக்தி அதிகமாகவுள்ள பெரும்பாலோரின் பேரறிவெல்லாம் இப்படித்தானே உலகிற்குப் பயன் படாது பாழாகி விடுகிறது!

பக்தியென்பது உறுதியான நம்பிக்கையின் அடிப்படையின் மீது கட்டப்பட்டது. உறுதியான நம்பிக்கை என்றுமே அறிவுவளர்ச்சியைத்தடைப்படுத்தவல்லது. 1802லே டால்டன் என்னும் அறிஞன் அணுவைப் பிளக்க முடியாது என்று கூறினான். அவன் கூறியதே பெரும் உண்மையென நம்பி அதிலேமிக்க நம்பிக்கையை விஞ்ஞானிகள் வைத்திருந்தால் இன்றுஅணுவைப் பிளந்திருக்க முடியுமா? அங்ஙனமே விவிலிய நூல் கூறும் படைப்பு முறையிலே முதன் முதலில் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையிலே மாறாத உறுதிகொண்டு விட்டிருந்தால், விவிலிய நூலுக்கு மாறான கருத்துகொண்ட, 'உள்ளது சிறத்தல்' என்ற அரிய உண்மையை உலகுக்கு எடுத்துணர்த்தியிருக்கமுடியுமா டார்வினால்! 1665 ல் இலண்டன்மாநகரத்தில் பெரும் பிளேக்நோய்பரவியபோது ஆண்டவனின் சீற்றம்தான் பிளேக்நோய் என்று கருதிய மக்கள், "பிரபுவே! எங்கள் மீது இரக்கம் காட்டுவீர்" என்று கூவி அலறினர்; அச்சொற்களைத் தங்கள் கதவுகள்மீதெல்லாம்எழுதிவைத்தனர், அவற்றைக்கண்டவுடனாவது பிளேக்நோய் உள்ளே நுழையாது நின்றுவிடும் என்று நம்பி. பிளேக்நோய் ஆண்டவனின் சீற்றம்தான் என்ற கருத்திலே ஹாப்கினும் நம்பிக்கைவைத்திருந்தால் அவனால் 1897 ம் ஆண்டு ஜனவரிமாதம் பிளேக்கை எதிர்த்து வெல்லும் ஊசிகுத்தும் முறையைக் கண்டுபிடித்திருக்கமுடியுமா? 'மனிதன் துன்பத்தில்தான் பிறக்கவேண்டும்" என்ற விவிலியநூல் வாக்கியத்தில் அசையாத நம்பிக்கைவுள்ளவராக19ம் நூற்றாண்டு ஆங்கிலேய மக்கள் இருந்ததால்தான், நோய்களை உணராமற் செய்கின்ற 'க்ளோரா பார்ம்' என்ற வியத்தகு மருந்தை யங்சிம்ஸன் கண்டுபிடித்தபோது, 'கடவுளாணையை இம்மருந்து அர்த்தமற்றதாக ஆக்கிவிடுகிறது. எனவே கூடாது' என்று விம்ஸனையும், குளோரபாரமையும் எதிர்த்தனர். விவிலிய நூல் புகலும் 'மாநிலம் தட்டை வடிவினது' என்ற கொள்கையிலே மக்கள் உறுதியான நம்பிக்கை வைத்திருந்ததாலல்லவா, 'உலகம் உருண்டை உருவினது' என்ற உண்மையை எடுத்துக்கூறிய அறிஞன் கலீலியோவை அவதிக்குட்படுத்தினர். அவ்வளவு ஏன்? நம் நாட்டிலே இன்று இந்து மதம் கூறும் மதமடமைகளிலே மக்கள் நம்பிக்கை வைத்துவிட்டிருப்பதாலல்லவா, மாண்புமிக்க தலைவர் பெரியார் அவர்களின் சிந்தனையினின்றும் சிதறும் சீரிய உண்மைகளை அவர்கள் உணரவும், ஏற்கவும் மறுப்பதோடல்லாமல், உண்மைக்கும், நாட்டின் நலத்துக்கும், மக்களின் மதிவளர்ச்சிக்கும் உழைக்கும் அவ்வுத்தமனைக்கற்களாலும், சொற்களாலும்புண்படுத்தவும்செய்கின்றனர்?

மேற் கூறியவற்றிலிருந்து உறுதியான நம்பிக்கை தளர ஆரம்பிக்கும் போதுதான் அறிவு வளர ஆரம்பிக்கிறது என்பதும், உறுதியான நம்பிக்கையால் அறிவு வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கப்படுகிறது என்பதும் பெறப்படுகின்றனவல்லவா? நம்பிக்கை தளராதவரை உண்மைக்கும், உண்மையை எடுத்துரைப்போனுக்கும் ஊறு நேரிடுகின்றது. நம்பிக்கை தளருவதற்கோ அய்யப்பாடு தேவை. எனவே அய்யப்பாடுதான் அறிவு வளர்ச்சிக்கு ஆக்கமளிக்கவல்லது என்பது பெறப்படுகின்றது. அறிவு வளர்ச்சியால் முடிவானவையும், உண்மையானவையுமான உண்மைகள் புலப்பட, இறுதியானதும் அசைக்கமுடியாததுமான நம்பிக்கை அவ்வுண்மைகளிடம் ஏற்படுகின்றது. இவ் வுண்மையைத்தான் சீனநாட்டு பெருந்தத்துவாசிரியராகிய ஹூஷி என்பார் 'அய்யப்பாடே அசைக்க முடியாத நம்பிக்கைக்குக் கொண்டுபோய்விடும் அரசபாதை' என்று செப்புகின்றார்.

நிற்க, ஆண்டவனிடம் ஆறாத அன்புடைய என்னருமை நண்பனை, எவ்வாறாகிலும் ஈரோட்டு மாத்திரையால் மாற்றிவிடுவது என்று உறுதிகொண்டுவிட்டேன். நண்பனும், யானும் நடந்துசென்றோம் தெருக்களின் வழியே. பர்லின் நெருக்கடியைப்பற்றியும், மூன்றாவது உலகப்போர் மூளுமா என்பதைப் பற்றியும், காஷ்மீர், ஹைதராபாத் கலவரங்கள் பற்றியும், தென்னாடு போரிலாது, குருதியாறோடாது, பிணங்கள் குவியாமல் பிரிவதற்கிடங்கொடுக்குமா? என்பனவற்றைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டே சிறுசிறு சந்துகள் வழியாகவெல்லாம் சென்று, சைதாப்பேட்டை ரெயில்வே நிலையத்தை யடைந்து மின்சார வண்டியேறி, கோட்டையிலிறங்கி, சைனாபஜார் சாலையோரமாகச் சென்றோம். சென்றுகொண்டிருக்கும்பொழுது ஒரு காட்சியைக் கண்டேன்.

அக்காட்சி என்னை விடாது சிரிக்கச் செய்தது. என்னவென என் நண்பன் வினவினான். யான் கூறினேன்: 'இன்று காலை 11 மணி இருக்கும். மேஜையோடு பொருத்தப்பட்டிருக்கும் ஒரு கண்ணாடியின் முன்னே வந்து ஒரு குருவி நின்றது. அக்கண்ணாடியுள் தன்னுருவம் தெரியவே, அது தன்னுடைய பிம்பம் என்றுணராது, வேறொரு குருவிதான் எதிரில் இருக்கிறதென்றெண்ணி அக்குருவியைத் தன்னலகால் குத்துவதிலே முனைந்தது. குத்தக் குத்தத் தன்னலகு கண்ணாடி மீது மோதி வலி யேற்பட்டும் குத்துவதை விடவில்லை. கண்ணாடியின் பின் பக்கம் போய்ப் பார்த்தது. அங்கு ஒன்றுமில்லாதிருக்கவே, மறுபடியும் கண்ணாடியின் முன் வந்து கண்ணாடியில் தெரியும் தன் சாயலை முன் போலக்குத்திக்கொண்டே இருந்தது. இவ்வாறு கண்ணாடியைத் தன்னலகால் குத்துவது, பிறகு பின்பக்கம் போய்ப்பார்ப்பது, மறுபடியும் முன்பக்கமாக வருவது, முன்போலவே குத்துவதுமாக 11 மணியிலிருந்து 1 மணி வரை செய்து கொண்டே இருந்தது அக்குருவி. அரிசி முதலானவற்றை இறைத்தால்கூட அவற்றைத் தின்னவும் வராது, சினத்தோடு தன் முன் கண்ணாடியில் தோன்றுவது சாயல் என்றறியாது, வேறொரு குருவி என்றெண்ணிக் குத்துவதிலேயே முனைந்திருந்தது. அந்நிகழ்ச்சி இப்பொழுது நினைவுக்கு வரவே சிரிப்பு என்னையும் மீறிக்கொண்டு வருகிறது' என்று.

'குருவிக்குப் பகுத்தறிவில்லை. எனவே தன் முன்னே இருப்பது கண்ணாடி, அதில் தோன்றுவது தன் பிம்

யமே என்று அதனால் உணர முடியவில்லை. அதனால் வேறொரு குருவியிருப்பதாக எண்ணி, அது குத்தியிருக்கும். அதிலென்ன ஆச்சரியம்? அதற்கேன் நீ சிரிக்கிறாய்? என்று என் நண்பன் மறுபடியும் வினவினான். மறுபடியும், மறுபடியும் விடாது சிரிக்கவே, அவன் சினந்து, 'என்ன பைத்தியக்காரன் போல் சிரிக்கிறாய்' என்று கேட்டான்.

'நண்பா, குருவிக்காகிலும்பகுத்தறிவில்லை. எனவேஅதற்குக்கண்ணாடியில்தன்னுருவம்தோன்றுமெனத்தெரியாது. ஆதலால் கண்ணாடியுள் தோன்றுவது ஒரு உண்மைக்குருவியென்றே நினைத்து விடுகிறது. அதிலே தவறேதுமில்லை. அதற்காகயான் சிரிக்கக்கூட அவசியமில்லை. மாறாக, பகுத்தறிவில்லாததால் அக்குருவி படும்பாட்டைக்கண்டு பரிதாபந்தான் படுகிறேன். ஆனால் அண்டபிண்ட சராசரங்களைப்படைத்த ஆண்டவன், உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்த நின்மலன், சொல்லுடல் மனத்திற்கெட்டாத எல்லையில், கடவுள் இக்கருங்கல்லினுள் இருக்கின்றான் என்று எண்ணி, அவன்முன்னே நின்று, தாடைகள் சிவக்கத் தங்கள் கைகளால் அடித்துக் கொள்ளும் இவ்வறிவிலிகளைக் கண்ணுறும் போது சிரிப்பு வரவில்லையா?' என்று சைனா பஸார் ரோடிலுள்ள சிவலிங்கத்தின் முன் நின்று கொண்டு தொழுதழுதிடும் தொண்டர்களைச் சுட்டிக்காட்டி என் நண்பனிடம் கூறினேன்.

'ஆலயவழிபாட்டை நீ பழிக்கிறாய் இது ஆகாது; என அவன் சினந்தான்.

'மதிபடைத்த நாம் மதியிலாத கல்லைத் தொழுதல் சரியா? எங்குமே நிறைந்த ஒருவனை இக்கல்லுருதான் என்று கருதுதல் கருத்துக்கொவ்வுமா? எல்லையில் பரம்பொருளை இக்கல்லினுள் அடைத்தல் கபோதித்தனமன்றி அறிவுடைய செயலாகுமா? 'உண்ணா துறங்காதிருந்தாய் போற்றி'' என்று நாவுக்கரசன் தன் பாட்டதனை நாவினால் இசைத்துக்கொண்டே, நாடொறும் அய்ந்துமுறை உணவளித்தலைப் பார்த்துக் கொண்டிருத்தல்தான் பகுத்தறிவா? பசி, துக்கம், இன்பம், முதலான அவஸ்தைகளெல்லாம் ஜீவராசிகளைச் சாருமேயன்றி சிவனையும் சாரவல்லனவோ?

அன்றுந்திருவுருவம் காணாதே
யாட்பட்டேன்
இன்றுந்திருவுருவம் காண்கி
லேன்—என்றுந்தான்
எவ்வுருவோன் உம்பிரான் என்
பார்கட்கென்னுரைக்கேன்.
எவ்வுருவோ நின்னுருவமேது'

என்று காரைக்காலம்மையாரே அயுற்று, காலனைக் கடிந்தோனின் வடிவத்தைக்காணாது கலங்கியபோது 'இவ்வுருதான் சிவனுரு' என்று நீயுரைத்தல் நீதியா, முறையா?

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்காயிரந் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ' என்று மாணிக்கவாசகரும் தெள்ளத்தெளிய 'அரன் அருபி' என்றறைந்த பின்பும் 'பரமனின் தோற்றமீதே' என்று வணங்குதல் வாலறிவாகுமா?' என்று சிறிது விளக்கினேன்.

'கோயிலில் இருப்பதை வெறுங் கல்லென நீ நினைக்கிறாய். பூசனைக்கு வைக்கப்பட்ட கல் புனிதமானது; வாசலுக்கு வைத்துள்ள கல்போன்றதல்ல. பூசனைக்கு வைக்கப்பட்டுள்ள கல் பல்லாயிர மந்திரங்கள் ஓதி பிரதிஷ்டை செய்யப்பட்டது. எனவே சக்தியுடையது; தெய்வீகத் தன்மை வாய்ந்தது' என்று என் நண்பன் என்னை எதிர்த்தான்.

'நண்பா பூசனைக்கு வைத்துள்ள கல்லுக்குத் தெய்வீக சக்தி யூட்டப்பட்டுள்ளது என்கிறாயா?' என்றேன்.

'ஆம்' என்றான்.

மனிதனால்தானே நீ சொல்லும் தெய்வீகசக்தி கல்லுக்கு ஊட்டப்பட்டது? மனிதனால் தெய்வீகசக்தி கல்லுக்கு ஊட்ட இயலுமேல் தெய்வந்தான் எது? அதன் தன்மைதானென்ன? அதனால் நமக்கு ஆகவேண்டியதுதானென்ன?

அப்படி அக்கல்லுக்குத் தெய்வீக சக்தி இருக்குமேல், கல்லாயிருக்கும் காமமகற்றிய தூயனடிகளைக் காணச் செல்பவருக்குக் காமம் வந்துறுவதேன்? 'கோட்டூர்க்கொழுந்தே, அழுந்தூர் அரசே, கொழு நற்கொல்லேறே' என்று பாடுவோன் கோதையரைக் கண்டதும் சித்தம் கலங்குவானேன்? காமமகற்றியோன் கல்லாய் எதிரிலிருந்தும், அக்கல்லுக்கு நீசொல்வது போல சக்தியிருந்தும், அச்சக்திக்குக் காம விகாரத்தை ஒழிக்கக் கூடிய திறனிருந்தும், பாவையரைக் கண்டதும் பரமனைப் பாடுவோனுள்ளத்தில், மான்விழி மாதர் மீது ஆசைதான் தோன்றுவானேன்? கற்கடவுளுக்கு உண்மையாகவே சக்தியிருக்குமானால் இவ்வாறு நடக்கமுடியுமா?

மேலும், இக்கோயிலில் ஆண்டவன் அணிந்திருந்தநகைகள் திருடுபோயின; அந்தஅம்மன் அணிந்திருந்த அணிகள் கொள்ளை போயின என்று நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆண்டவன் குற்றங்களை அகற்றவல்லவன் என்பதுண்மையானால், நீ கூறுவது போல் கற்கடவுளுக்கும் ஆண்டவனின் சக்தி இருக்குமானால், திருடச்செல்பவனும் கல்லுருவாயுள்ள ஆண்டவனின் சக்தியால் மாறுதலடைந்து நல்வழி நாடமாட்டானா? அங்ஙனம் நிகழாது திருட்டுதானே நடைபெறுகின்றது. எனவே நண்பா ஆலயத்துள் இருப்பது வெறுங் கல்லல்ல, சக்தியுள்ள கல் என்று கூறுவது கருத்தில்லாததுதானே; என்று வினவினேன்.

'நீ கூறுவது உண்மைதான். ஆனால் உருவங்களைக் கண்டாகிலும், ஆண்டவனுடைய நினைப்பு வந்து அவனைத் தொழட்டும் என்பதற்காகத்தான் ஆண்டவனை நினைவூட்டக்கூடிய சின்னமாக இவற்றைப் (கல்லுருவங்களை) பெரியவர்கள் அமைத்தனர் என்று கொண்டால் என்ன தவறு, என்று கேட்டான்.

'ஆண்டவனை நினைவூட்டக்கூடிய சின்னம் இக்கல்லுருதானா? பரந்த வானும், பால்வெண்ணிலவும், அளவிறந்த விண் மீன்களும், கனைகடலும், கதிரவனும், நிலமிசைத்தோன்றிய மரங்களும், செடிகளும், கொடிகளும், முகிலினைப் பிளந்துசெல்லும் பனிசூழ்பாறைகளும், பாறைகள் மீதிருந்து ஓமென ஒலித்து வீழும் நீர் வீழ்ச்சிகளும் இக்கல்லுருவைக்காட்டிலும் மிகச் சிறந்தனவும், நிலையானவையுமான சின்னங்களல்லவா? என்றேன்.

'ஆம்,' என்றும் இசையாமல் 'இல்லை, என்றும் எதிர்க்காமல், நேரமாகிறது, வீட்டுக்குப்போகலாம் புறப்படு, என்றான். கடலோரவெண்மணற் பரப்பை எங்கள் கால்கள் அடிமேல் அடிவைத்துக் கடந்து வீடு வந்து சேர்ந்தன.




Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE